பக்கங்கள்: 12+IV= பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 13 சனிக்கிழமை (30-08-2003)

UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:275

## அமைச்சரின் சகா சுட்டுக் கொலை!

கொழும்பு,ஓக.30

கடற்றொழில் அமைச்சர் மஹிந்த விஜய சேகரவின் நெருங்கிய ஆதரவா ளர் ஒருவர் நேற்று முற்பகல் மாத்த றையில்வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்; அவரது மனைவி படுகாயம் அடைந்தார்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர் பான வழக்கு ஒன்றுக்காக மாத்தறை நீதிமன்றத்துக்கு சென்று திரும்பிய வேளையே இந்த நபர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குழு சுவிஸ் பயணம்

பாீஸ்,ஓக.30

அரசின் இடைக்கால நிர்வாக சபை வரைவு குறித்து சட்டவல்லுநர் களுடன் பாீஸில் கலந்துரையாடிய விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் இன்று சுவிஸிற்குப் புறப் படுகின்றனர்.

சட்டவல்லுநர்களுடன் இணைந்து தயாரித்த வரைவில் மேலும் புதிய விடயங்களைச் சேர்ப்பது தொடர் பாக சுவிஸ் சட்ட வல்லுநர் ஒரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



*1996 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி பாீஸில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரச்சாவடைந்த லெப்.கேணல் நாதன் மற்றும் கப்டன் கஜன் ஆகியோரின் கல்லறைகளில் பிரான்ஸ் சென்றுள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் மட்டு.- அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோர் அஞ்சலி செலுத்துகின்றனர். (ஓ)*

## நல்லூரில் அடிதடி: மூவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத தில் ஆலய சுற்றாடலில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக் கிடையில் ஏற்பட்ட தகராறு நேற்றிரவு அடிதடியில் முடிவடைந்துள்ளது.

நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் சங்கானை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணின் சடலம் ஒன்று கரையொதுங்கியது!

மட்டக்களப்பு,ஓக.30

மட்டக்களப்பு கல்முனைக்கடற் கரையில் துப்பாக்கிச் சூட்டுக்காயத் துடன் நேற்றுமுன்தினம் இரவு ஆண ஒருவரது சடலம் கரையொதுங்கி யுள்ளது.

அந்தச் சடலம் உடனடியாக மட் டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத் துச்செல்லப்பட்டது.

சடலத்தை எவரும் அடையாளம் காட்டாததால் நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மேற்படி சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார். (ஓ-4)

### அரசு ஏற்றாலும், ஏற்றுக்கொள்ளாது விட்டாலும்

# எமது ஆலோசனைகள் நுட்பமானவை; அவை உலகிற்கு உண்மையை உணர்த்தும்!

## கேணல் கருணா அம்மான் தெரிவிப்பு

பாீஸ்,ஓகஸ்ட்30

**இடைக்கால நிர்வாகம் பற்றி சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து பாீஸ் நகரில் நாம் தயாரித்த ஆலோசனைகள் உறுதியானவை, நுட்பமாக உருவாக்கப்பட்டவை. பிரதமர் ரணிலுக்கும், பேராசிரியர் பீரிஸுக்கும் சட்டம் கற்பித்த ஆசானின் கருத்துக்களையும் உள்ளடக்கி தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவை. அந்த ஆலோசனைகளை அரசு ஏற்றா லும், ஏற்காது விட்டாலும் உண்மைநிலை உலகிற்குப் புரிந்துவிடும்.**

**- இப்படி பாீஸ் கூட்டங்களில் கலந்துகொண்ட புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணா அம்மான் கருத்துத் தெரிவித்தார்.**

பாீஸ் கூட்டங்களுக்குப் பின்னர் சர் வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் துக்கு கேணல் கருணா நேற்று செவ்வி அளித்தார். அதிலேயே அவர் மேற் கண்ட கருத்துக்களை வெளியிட் டார்.

கருணா அம்மான் தனது செவ்வி யில் மேலும் தெரிவித்ததாவது:-

மிகவும் நுட்பமாக - அனுபவம் வாய்ந்த - சட்ட வல்லுநர்களின் உதவி யுடன் தயாரிக்கப்பட்ட எமது ஆலோச னைகளை அரசு தூக்கியெறிந்தால் அது அரசு தனது இனவாதப் போக்கை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத் தியதாகவே முடியும். அத்துடன், சர்வ தேச சமூகத்துக்கு எமது உரிமைப் போராட்டத்தின் உண்மையான போக் கும் தெளிவுபடுத்தப்பட்டுவிடும்.

## மீள்குடியமர்வு, பாதுகாப்பு வலயம் அடுத்தகட்ட பேச்சில் முன்னுரிமை

### பிரதமர் ரணில் கூறுகிறார்

கொழும்பு,ஓக.30

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையிலான அடுத்தகட்டப் பேச் சுக்களில் மீள்குடியமர்வு, பாதுகாப்பு வலயம் ஆகிய விடயங்களே முன் னுரிமை அளித்து ஆராயப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

கடவத்தையில் உள்ள பௌத்த விகாரையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் அவர் இப்படிக்கூறி னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமா கும்போது அது மிகவும் தீர்க்கமான விடயங்களை ஆராயும் பேச்சாக அமையும்.

வடக்கிலிருந்து வெளியேறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கில் பாரிய குண்டு வெடிப்பு! 100 பேர் பலி; 229 பேர் காயம்!!

பக்தாத்,ஓக.30

ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் புனித நகரான நஜாப்பில் நேற்று மசூ தியில் தொழுகை நடத்தக் குழுமி இருந்தோரை இலக்குவைத்து நடத் தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில், நூற்றுக்கும் அதிகமானோர் கொல் லப்பட்டனர்; 229பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் நூறுக்கும் மேற்பட்டோர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந் தச் சம்பவத்தில் ஷியா இன முஸ்லிம களின் தலைவரான அயதுல்லா அல்-ஹக்கீம் கொல்லப்பட்டார்.

தலைநகர் பக்தாத்தில் இருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இமாம் அலி மசூதியிலேயே இந்தப் பயங்கரம் இடம்பெற்றது.

குண்டுவெடித்த இடத்தில் கொல் லப்பட்டவர்களின் உடல் பாகங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அப் பகுதி இரத்த வெள்ளமாகக் காட்சி யளித்தது.

ஷியா முஸ்லிம்களுக்கும், சன்னி முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள பகைமையே இந்தக் குண்டுத் தாக் குதலுக்குக் காரணம் என்று தெரிய வருகிறது.

ஆனால், ஈராக்கிலுள்ள முஸ் லிம் இனப்பிரிவுகளிடையே மோதலை ஏற்படுத்துவதன் மூலம் தமது இருப்பை ஸ்திரப்படுத்திக்கொள்ள விரும்பிய அமெரிக்கப்படையினரின் நாசவே லையே இது என்று ஈராக்கியர்கள் கூறுவதாக இணையத்தளச் செய்தி கள் தெரிவிக்கின்றன.



ஈராக்கில் குண்டுவெடிப்பு நடந்த இடம் (ஏ.பி)

## தேசிய அரசு அமைக்கப்பட்டால் டிரோனுக்கு பிரதமமந்திரிப் பதவி!

### ஜனாதிபதி தூண்டில் போடுகிறார் என்று செய்தி

கொழும்பு,ஓக.30

தேசிய அரசு ஒன்றை அமைக்கும் சாத்தியங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆராய்ந்து வருகிறார் என்று வாராந்த சிங்களப் பத்திரிகையொன்று தெரிவிக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவை அழைத்து நடத் திய விஷேட பேச்சின்போதே ஜனா திபதி இவ்விடயத்தை ஆராய்ந்தார் எனக் கூறப்படுகிறது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட் டிருப்பதாவது:-

தன்னுடைய பதவிக்காலம் முடி வடைவதற்குமுன்னர் இன்றைய ஐ.தே. முன்னணி அரசைக் கவிழ்த்து விட்டு தேசிய அரசொன்றை நிறுவ தன்னால் முடியும் என்பதை டிரோன் பெர்னாண் டோவிடம் ஜனாதிபதி விளக்கிக் கூறி யிருக்கிறார்.

இன்றைய அரசிலிருந்து வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செப்.30 ஆம் திகதிக்கு முன் சு.க.- ஜே.வி.பி. ஒப்பந்தம்?

கொழும்பு,ஓக.30

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி. பிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப் பந்தம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம திகதிக்கு முன்னர் கைச்சாத் திடப்படுமென்று பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தி யோக பூர்வ அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்கள் இறு திக்கட்டத்தை அடைந்துள்ளன. மாகாணசபைத் தேர்தல்களுக்கு முன் பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திடுவர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இலட்சிய நாளிதழ்

# நிரந்தர சமாதானத்தை விரைவுபடுத்தவே வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்வு!

## ஏற்பாட்டுக்குழுவினர் அறிக்கை

வவுனியா,ஓக.30

நிரந்தர சமாதானத்தை விரைவுபடுத்தவே வவுனியாவில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'பொங்குதமிழ்' தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த உரிமைக்குரலின் உணர்ச்சி பொங்குகின்ற ஒரு களம். நீண்டகாலம் அடக்கு முறைகளுக்குள் அடக்கப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமூகம் விடுதலைப் போராட்டம் வீறார்ந்த வரலாற்றோடு தன்னை இணைத்துக் கொண்டுவிட்டபோது பொங்குதமிழர்களாய் கிளர்ந்தெழுந்தனர். அடங்கிக் கிடந்த உணர்ச்சிகளை வெளிக்காட்டி அபிலாஷைகளை முழு உலகுக்கும் சொன்னபோது உலகம் அதிசயித்தது. தமிழ் மக்களின் போராட்டத்திற்கான நியாயங்கள் உணரப்பட்டன.

மூண்டெரியும் இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேச சமூகத்திலிருந்து மேற்கிளம்பியது. சமாதான நடைமுறையைக் குழப்பவென திட்டமிட்டுச் செயலாற்றும் இனவாத சக்திகள் பொங்குதமிழ் கண்டு கிலி கொண்டுள்ளன. 'பொங்குதமிழ்' தமிழ் மக்களின் விடுதலை பற்றிய நியாயபூர்வமான ஆசையை முழு உலகும் வியக்க வெளிப்படுத்திய ஓர் அரங்கு. இது இன்னொரு சமூகத்தைப் பாதிக்கும் எந்த ஒரு வேலையையும் செய்யவில்லை. மற்றவர்களின் உரிமையில் எந்தவித தலையீட்டையும் செய்யும் நோக்கம் பொங்குதமிழுக்குக் கிடையாது. மாறாக, மற்றைய சமூகத்தின் உரிமையையும் மதித்துக் கொண்டு எமது உரிமைக்காய் அணி திரள்வதுதான் பொங்குதமிழ். பொங்குதமிழ் மக்கள் மத்தியில் இன்று கலாசார நிகழ்வாகவே பரிணாமம் கொண்டுவிட்டது.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் எங்களது விருப்பங்களை வெளிக்காட்ட பொங்குதமிழ் களம் கண்டு கொண்டே இருக்கும். இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே பொங்குதமிழ் ஊடாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் மதிக்கப்பட்டு, தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு நீதியும், கௌரவமும் நிறைந்த தீர்வு எட்டப்படும் போதுதான் இந்தத் தீவில் நிரந்தர சமாதானம் தோன்ற முடியும். தமிழர்கள் தங்களது நியாயமான போராட்டத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட பொங்குதமிழ் களம் அமைத்துக் கொடுக்கின்றது. எமது விடுதலையின் தேவையை கலாசார நெறி முறையில் வெளிப்படுத்துவதென்பது எமது அடிப்படை மனித உரிமையாகும். இந்த உரிமையை மறுதலிக்கும் உரிமை வேறு எவருக்கும் கிடையாது.

தமிழ் மக்கள் எதுவித வன்முறையையும் தழுவாமல் பண்பாட்டு நெறி முறையில் எழுச்சி கொண்டு அணி திரண்டு உரிமை வேண்டும் எனக் குரல் கொடுக்க பொங்குதமிழ் எழுச்சியில் பங்கு கொள்வர்கள் இந்த நாகரிகத்தைப்புரிந்துகொள்ளாமல் இராணுவத்தரப்பினர் கேள்விகளைக் கேட்பதும், காரணம் கோருவதுமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் சூழலில் பொருத்தமானதல்ல. இத்தகைய மிரட்டல் பாணியிலான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மீது மீண்டும் யுத்தத்தை வலிந்து திணிக்கும் அபாயத்தைத் தோற்றுவிக்குமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. சகல தரப்பினரும் நிதானமாகச் செயற்படுவதன் மூலம் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்பமுடியும்.

தமிழ் மக்கள் தம்முள் திரண்டெழுந்து தமது உரிமையைக் கேட்பதென்பது எந்த விதத்திலும் சிங்கள மக்களைப் பாதிக்காது. மாறாக, அவர்களும் நிரந்தர சமாதானத்துடன் வாழும் நிலையையே தோற்றுவிக்கும். எனவே, நிரந்தர சமாதானத்தை விரைவுபடுத்தும் வகையில் தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் திரண்டெழுந்து வவுனியா நகரசபை முன்றலில் அணிதிரள்வோம்.

- என்றுள்ளது.

### வவுனியா பொங்குதமிழ் நிகழ்வு செப்ரெம்பர் 24 க்கு பிற்போடப்பட்டது

வவுனியா,ஓக.30

வவுனியாவில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவிருந்த பொங்குதமிழ் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வை பிரமாண்டமான முறையில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது என்றும் -

இதற்கு கால அவகாசம் தேவையாக இருப்பதால் நிகழ்வை அடுத்த மாதம் 24ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வு போன்று மக்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நிகழ்வாக வவுனியா பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வவுனியாவில் உள்ள சகல தரப்பினரையும் இந்த நிகழ்வில் பங்கு பற்றச்செய்யும் வகையில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டுக்குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-3)

## ஐ.தே.க. அரசை வெளியேற்றுவதே நோக்கமென்றால்

# சு.க. - ஜே.வி.பி. முன்நிபந்தனையின்றி முன்னணி குறித்துப் பேச வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஓக.30

ஐ.தே.க. அரசை வெளியேற்றுவது முன்னணி அமைப்பதன் நோக்கம் என்றால் சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் முன் நிபந்தனைகளின்றி முன்னணியை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

இதற்கென இரு கட்சிகளுமே தியாகங்களைச் செய்யவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ரத்தோட்டையில் மாத்தளை, ரத்தோட்டைத் தொகுதிகளின் பொ.ஐ.முன்னணி தொண்டர்களுடனான ஒரு சந்திப்பிலேயே அவர் இவற்றைக் கூறினார்.

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான முன்னணி பற்றிய பேச்சுக்களின் இன்றைய நிலை குறித்து அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் வினவினர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்ட மஹிந்த ராஜபக்ஷ, முன்னணி அமைப்பது பற்றிய பேச்சுக்கள் தொடருகின்றன என்றும், ஐ.தே.க. அரசைத் தோற்கடிக்க முன்னரும் பொது முன்னணிகள் அமைக்கப்பட்டன என்றும் சொன்னார். (ஒ)



பிரிட்டனில் இடம் பெற்ற போட்டிகளில் பங்கேற்று வெற்றிகளைக் குவித்த தமிழீழ வலைப்பந்தாட்டக் குழுவினர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போது எடுக்கப்பட்ட படம். (செய்தி 10 ஆம் பக்கத்தில்)

# இலங்கையர் தொழில் பாதுகாப்புக்கு மலேஸியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## அடுத்த ஆண்டில் மேலும் 10,000 வேலைவாய்ப்புக்கள்

கொழும்பு,ஓக.30

மலேஸியாவில் தொழில் புரியும் இலங்கையர்களின் தொழில் பாதுகாப்பு, சேமநலன் ஆகியவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று மலேஸியாவில் கைச்சாத்திடப்பட்டது. தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும், மலேஸிய தொழில், மனிதவள போக்குவரத்துத்துறை அமைச்சரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன்கள் தொடர்பாக வெளிநாட்டு அரசு ஒன்றுடன் இலங்கை செய்துகொண்ட முதலாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தற்பொழுது மலேஸியாவில் பத்தாயிரம் இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் சட்டவிரோதமாகவே அங்கு சென்று தொழில் புரிகின்றனர்.

நேற்று கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் அங்கு பணிபுரியும் அனைத்து இலங்கையர்களினதும் தொழில் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அடுத்த ஆண்டில் மேலும் பத்தாயிரம் இலங்கையர்களுக்கு மலேஸியாவில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கவிருக்கின்றன.

தாய்லாந்து, தென்கொரியா விஜயங்களை முடித்துக்கொண்டு அமைச்சர் சமரசிங்க நேற்றுமுன்தினம் மலேஸியா சென்றடைந்தார். அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரும் தற்பொழுது மலேஸியா சென்றிருக்கின்றனர்.

# மடு வீதியை மீண்டும் திறக்க ஒஸ்ரின் - ரெலிவ்சன் பேச்சு

## நேற்று முற்பகல் இடம்பெற்றது

கொழும்பு,ஓக.30

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ரெலிவ்சன் நேற்று முற்பகல் சந்தித்துப்பேச்சு நடத்தினார். மூடப்பட்டிருக்கும் மடு வீதியை மீண்டும் திறப்பது குறித்தே இருவரும் பேச்சு நடத்தினர் என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளரான அக்னஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு நிலைமை குறித்தும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்தும் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தினார் எனவும் அறியப்பட்டது.

மடு ஆலயத்துக்கான மடுரோட் வீதியை ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரீகர்கள் மட்டுமே பயன்படுத்த இராணுவம் அனுமதியளிக்கின்றது. இதனால் மடுப்பிரதேசத்திலுள்ள கிராமங்களின் மக்கள் தமது பிரயாணங்களில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். தங்களின் பயணங்களுக்கு இந்த வீதியைத் திறந்து விடுமாறுகோரி அம்மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகின்றனர்.

இதற்கிடையே, மடு வீதியை சகல மக்களுக்கும் திறந்து விடும்படி கோரும் கடிதமொன்றை விடுதலைப்புலிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அரசுக்கு அனுப்பிவைத்துள்ளனர். (ர-7)

## பொலன்னறுவையில் நடந்திருக்கும்

# நெல் கொள்வனவு மோசடி குறித்து அமைச்சு அதிகாரிகள் விசாரணை

கொழும்பு,ஓக.30

பொலன்னறுவையில் நடந்திருக்கும் பெரும் நெல்கொள்வனவு மோசடி ஒன்று குறித்து உடனடியாக விசாரணைகளை நடத்தும்படி விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உத்தரவிட்டிருக்கிறார்.

திறைசேரி, விவசாய, வர்த்தக அமைச்சுகள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று இவ்விசாரணைகளுக்காக பொலன்னறுவைக்கு விரைந்திருக்கிறது.

பொலன்னறுவை மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தின்போது களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட 30ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை பிறமா நிறுவனத்துக்கு விற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்தது.

அம்மாவட்டத்தில் அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கூட்டுறவுச் சங்க பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. மேலதிகமாக இருக்கும் அந்த நெல் முழுவதையும் பிறீமா நிறுவனத்துக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஏற்பாட்டையடுத்து, கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம் அந்த பண்டகசாலைகளைத் திறந்து, நெல்லை விநியோகிக்க நடவடிக்கை எடுத்தது. அப்பொழுது அவற்றில் சுமார் மூவாயிரம் மெற்றிக் தொன்கள் நெல்லே இருப்பது தெரியவந்தது.

- உடனே, நெல் கொள்வனவுப் பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டன. 7ஆயிரத்து 704 மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இதனால் சுமார் 4ஆயிரம் மெற்றிக்தொன்களுக்கு மேற்பட்ட நெல்லுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை.

### காவலாளிக்கு பிணை அனுமதி

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அப்பாடசாலையின் காவலாளியைப் பிணையில் செல்ல யாழ் மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் அனுமதியளித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை யாழ். மேலதிக நீதிவான் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது பாடசாலைக் காவலாளி தில்லையம்பலம் ரமணன் சார்பாக பிணை அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிவான், சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமைகளில கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் கையெழுதது இடவேண்டும் எனவும் சந்தேக நபருக்கு நிதிவான் உத்தரவிட்டார். (ஒ-5)

ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி

# கழுதை வண்டியில் சென்ற ஹமாஸ் உறுப்பினர் பலி!

காஸாவின் தென்பகுதி நகரில் கழுதை வண்டியை ஓட்டிச்சென்ற ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவின் மூத்த உறுப்பினர் ஒருவர் இஸ்ரேலிய உலங்கு வானூர்தி நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி கொல்லப் பட்டார்.

கழுதையும் தாக்குதலில் சிக்கி இறந்தது. இத்தாக்குதலில் மேலும் மூவர் காயமடைந்தனர். தாக்குதல் நடந்த இடத்திற்கு விரைந்த ஹமாஸ் ஆதரவாளர்கள் கொல்லப் பட்டவரின் உடலை தூக்கிவைத்து, இஸ்ரேலியர்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு எதிராக முழு வீச்சில் நடவடிக்கைகளை எடுக்குமாறு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மேற்படி தாக்குதல் நடந்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து, போர்நிறுத்த ஒப்பந்தத்தில் மீண்டும் இணையுமாறு அரபாத் விடுத்த வேண்டுகோளை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

இஸ்ரேலியப் படையினர் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தும்வரை போர்நிறுத்தத்தில் மீண்டும் இணையப் போவதில்லையென அது கூறியுள்ளது.

ஹமாஸின் இந்த அறிவிப்பைக் கண்டித்துள்ள பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் நபில்சாத், ஹமாஸின் இவ்வாறான நடவடிக்கைகள பலஸ்தீனர்களை அழிவுக்குள் தள்ளிவிடும் என்று கூறியுள்ளார். அத்துடன், அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தின் மூலமே பலஸ்தீனர்களுக்கு விடிவு கிட்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.



காஸாவில் பலஸ்தீனர் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் சோதனையிடுகிறார்கள்.

# நேபாளத்தில் மீண்டும் சண்டை; மூத்த இராணுவ அதிகாரி பலி!

காத்மண்டு,ஓக.30

நேபாளத்தில் கடந்த ஏழு மாதங்களாக அரசுடன் நடத்தி வந்த சண்டையை நிறுத்திவைத்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நேற்று நடத்திய திடீர் தாக்குதலில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் இறந்தார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

நேபாளத்தில் கடந்த ஏழுமாதங்களாக யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் காத்மண்டுவில் இராணுவ அதிகாரிகள் இருவர் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் இராணுவ அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

மற்றொரு இராணுவ அதிகாரி பிரிட்டிஷ் தூதரகம் அருகே காரில் சென்றுகொண்டிருந்தபோது சுடப்பட்டார். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அறுவை சிகிச்சையின் மூலம் கையில் இருந்த குண்டுகள் வெளியே எடுக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பினரும் பொறுப் பேற்கவில்லை. தாக்குதலை அடுத்து தலைநகர் காத்மண்டு நகர் முழுவதும் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

# கடந்த இரண்டு தசாப்த காலத்தில் பெருவில் 69 ஆயிரம் பேர் மரணம்!

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் பெருவில் நடைபெற்ற அரசியல் வன்முறைகளில் 69 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு அரச அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அரச படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் நடந்த சண்டையில் சிக்கி உயிரிழந்த பொது மக்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு 'சயினிங் பாத்' என்ற கிளர்ச்சியாளர்களே உள்நாட்டுப் போரைத் தொடக்கிவைத்தனர் என்றும் -

அதுமுதல் இதுவரை 69 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் -

படையினரும் பொலீஸாரும் கூட கொலைகளை நடத்தியிருந்தனர். என்றும் - அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையை, இது தொடர்பான விசாரணைக் குழுவின் தலைவர் சலமொன் லேனர் பெரு ஜனாதிபதி அலி ஜன்ரோவிடம் கையளித்தார்.

அறிக்கையைக் கையளித்த லேனர், மேற்படி உயிர்ப்பலிகளுக்கு பொறுப் பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.



பெரு நாட்டில் அரசியல் வன்முறைகள் குறித்த அறிக்கையை அதிபர் அலி ஜன்ரோ பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# நூற்றுக்கணக்கானோரைக் கொன்று குவித்த பிரேஸில் பொலீஸாரின் அட்டூழியம் அம்பலம்!

ரியோடி ஜெனரோ,ஓக.30

இந்த வருடத்தில் இதுவரை நூற்றுக்கணக்கானோரை வகைதொகையின்றி கொன்று குவித்து பிரேஸில் பொலீஸாரின் அட்டூழியம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்படி விடயம் அம்பலமாகியுள்ளது.

முக்கியமாக, ரியோடி ஜெனரோவின் சேரிப் புறங்களுக்குள் புகுந்த பொலீஸார் கண்மூடித்தனமாக உயிர்பலிகளை எடுத்துள்ளனர் என்றும் -

குற்றச் செயல்களை அடக்கும் போர்வையில் இந்தக் கொடூரம் நடந்துள்ளமை அடக்குமுறையையும், வன்முறையையுமே எடுத்துக் காட்டுகிறது என்றும் - பிரேஸில் அரசின் மீதும், பொலீஸார் மீதும் சர்வதேச மன்னிப்புச்சபை கடுமையாகச் சாடியிருகிறது.

இந்தக் கொடூரங்கள் குறித்து பிரேஸிலுக்கான சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரி பிளற் தெரிவித்ததாவது:-

கிரிமினல் குற்றவாளிகளைக் கைதுசெய்யச் சென்ற பொலீஸாரை, சேரிப்புற மக்கள் தடுத்து நிறுத்தியதால் அவர்களை அடக்கவேண்டி ஏற்பட்டது என்று கூறி பொலீஸார் அவர்களைத் தொகை தொகையாக முதுகுப்பக்கமாக சுட்டுக்கொன்றுள்ளனர்.

பாகுபாடான வன்முறைகளுக்கும், கொள்ளைகளுக்கும் முகம் கொடுத்த சேரிப்புற மக்கள், பொலீஸாரின் குண்டுகளால் துளைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கொலைகளை நியாயப் படுத்தி அரசியல்வாதிகளும் இதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளனர்.

2003ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் 621 குடிமக்களை பொலீஸார் தகுந்த காரணமின்றி சுட்டுக் கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் கிரிமினல் குற்ற சந்தேக நபர்களாயினும் அவர்களுக்கு வாழும் உரிமையுண்டு. கடந்த ஆண்டு இவ்வாறு 900 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது - என்றார்.

சர்வதேச மன்னிப்புச் சபை அம்பலப் படுத்தியுள்ள இத்தகவல்களால், விசனம் அடைந்துள்ள பிரேஸில் அரசு, இது குறித்து பிரேஸில் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவரான ஜோர்ஜ் டி சில்வா கூறுகையில், சர்வதேச மன்னிப்புச் சபைக்கு இந்தத் தகவல்கள் எங்கிருந்து கிடைத்தனவோ தெரியாது. அவர்களுக்கு இந்த ஆண்டின் முற்பகுதியில் கிரிமினல்களால் நூற்றுக்கும் மேற்பட்ட பொலஸார் அநியாயமாகக் கொல்லப்பட்டனர் என்பது தெரியவில்லை போலும், அதுதான் அவர்கள் தமது அறிக்கையில் அது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை - என்றார்.

உலக அரங்கில்

# 'எஸ்மா' சட்டத்தின்கீழ் கருணாநிதி மீது அடுத்த வாரத்திற்குள் குற்றப்பத்திரிகை

தி.மு.க.தலைவர் கருணாநிதி மீது அடுத்த வாரத்துக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரச ஊழியர்களின் போராட்டத்தைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கருணாநிதி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தமிழகப் பொலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

கருணாநிதியை குற்றப்பிரிவுப் பொலீஸார் இரண்டு முறை சந்திக்க முயன்றபோதும் முன் அனுமதி பெறாததன் காரணமாக அவரைச் சந்திக்க முடியாமல் பொலீஸார் திருப்பியதையடுத்து, கருணாநிதியை சந்தித்து விசாரணை நடத்தும் முடிவை பொலீஸார் கைவிட்டுள்ளனர்.

தற்போது, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் பணியில் பொலீஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர். இன்னும் ஒரு வாரத்துக்குள் குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்றும் -

கருணாநிதி மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முனைவது கேலிக்குரியது என்றும் - தி.மு.கவினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

# 8 சிறுமிகளைக் கொன்றவருக்கு ஜப்பானில் தூக்குத் தண்டனை!

டோக்கியோ,ஓக.30

2001ஆம் ஆண்டு, பாடசாலையில் கல்விகற்றுக் கொண்டிருந்த எட்டு ஜப்பானிய சிறுமிகளைக் கத்தியால் குத்திக் கொன்றவருக்கு நேற்று முன்தினம் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஜப்பானை உலுக்கிய இந்தச் சம்பவம் குறித்த வழக்கை நீதிபதி மாசாயூகி கவாய் விசாரித்தார். ஆறு வயது முதல் எட்டு வயதுடைய சிறுமிகளையும், சிறுவர்களையும் மிருகத்தனமாக வெட்டிக் கொலை செய்த 39 வயதுடைய மமோருதாகுமா என்ற இவருக்கு தூக்குத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாக தாகுமாவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

குழந்தைகளைக் கொலை செய்யும் போது தாகுமா மனநிலை பாதிக்கப் பட்டிருந்தார் என்று அவரது சட்டத்தரணி கூறுகிறார். இருப்பினும், நல்லது கெட்டதை உணரக்கூடிய திறனை பெற்றிருந்த தாகுமாவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கும்படி அரச வழக்கறிஞர் நீதிபதியைக் கோரினார். இதனை ஏற்று தாகுமாவுக்கு தூக்குத் தண்டனை விதித்தார் நீதிபதி.

வேலை வாய்ப்பின்றி, பொருளாதாரத்தில் நலிவுற்றிருந்த இவர், தன் கோபத்தை சமுதாயத்தின் மீது காட்டியுள்ளார். இருப்பினும் கருணையின்றி படுபாதக செயலை செய்த இவருக்கு மன்னிப்பு வழங்க முடியாது என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

வடகொரியாமீது அமெரிக்கா காட்டும் பகைமையால்

# சீனாவில் ஆறு நாடுகள் கூடி நடத்தும் பேச்சு அடியோடு குழம்பும் சாத்தியம்!

வடகொரியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலைத் தவிக்கும் முகமாக சீனாவில் ஆறு நாடுகள் கூடி நடத்தும் பேச்சுக்கள் அடியோடு குழம்பும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமைக்கு மேற்படி பேச்சுக்களின் போது அமெரிக்கா காட்டி வரும் பகைமையே காரணம் என்று வடகொரியா கூறியுள்ளது.

அமெரிக்கா தனது நிலைப்பாட்டைத் தொடர்ந்து நடக்கவிருக்கும் பேச்சுக்களின் போது மாற்றிக் கொள்ளாவிட்டால் பேச்சுக்கள் தோல்வியடையலாம் என்றும் அது கூறியுள்ளது. அனல்தெறிக்கும் அறிக்கைகளை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் வடகொரியா, மூன்று நாள் பேச்சுக்களின் முடிவில் அறிக்கை ஒன்றிலேயே மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா பகைமைப் போக்கைக் கைவிட்டு, தாக்குதல் நடத்துவதில்லை என்று உத்தரவாதம் அளித்தால் மட்டுமே அணுவாயுதத் திட்டங்களைக் கைவிட முடியும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்தன என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அணுவாயுதங்களை உற்பத்தி செய்ய வடகொரியா முயற்சி செய்கிறது என்று கூறும் அமெரிக்கா, மேற்படி பேச்சுக்களின் போது வடகொரியாவைத் திணறடிக்கும் விதத்தில் அழுத்தங்களைப் பிரயோகித்து அதனை சின்னாபின்னமாக்க முயல்வது வெளிப்படையாகியுள்ளது என்றும் கூறப்படுகிறது. மூன்று நாளகள் தொடர்ந்து நடைபெற்ற மேற்படி பேச்சுக்களில் அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரியா, ஜப்பான், சீனா ஆகிய ஐந்து நாடுகளிடையே பெரும் ஒத்துழைப்பு காணப்பட்டபோதும், வடகொரியா தனது கொள்கையில் விடாப்பிடியாக நின்றதால் பேச்சுக்கள் மந்த நிலையை அடைந்துள்ளன என்று செய்திகள் கூறுகின்றன. ஆனால், பேச்சுக்களை தொடருவதற்கான முயற்சியில் சீனா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகள் ஈடுபட்டுள்ளன.

# செப்.11 தாக்குதல் அவலங்கள் ஒலி நாடாக்களாக வெளியீடு!

அமெரிக்காவில் நடந்த செப்.11 தாக்குதலின் போது உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரத்திலிருந்தவர்களின் அவலக் குரல்கள் ஒலிநாடாவாக வெளியிடப்பட்டுள்ளது.

தகர்ந்த உலக வர்த்தக மையத்தின் உரிமையாளரான நியூயோர்க் துறைமுக அதிகார சபை மேற்படி ஒலிநாடாவை வெளியிட முன்னர் மறுத்து வந்தபோதும் நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த ஒலிநாடாவை அது வெளியிட்டுள்ளது.

அதில் பலியானவர்களின் ஓலங்களும் கட்டத்தினுள் சிக்குண்டவர்களைக் காப்பாற்றச் சென்றவர்களின் அலறல்களும் பதிவாகியுள்ளன. இவற்றில் 36பேரின் அவலக்குரல்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளன.

ஒலிநாடாவில் பதிவாகியுள்ள குரல்களில் ஒன்று - "நீங்கள் குதிக்கப் போகிறீர்களா?" என்றும் இன்னொன்று "வானத்தில் இருந்து மனித உடல்கள் விழுந்து கொண்டிருக்கின்றனவே!" - என்றும் பதிவாகியுள்ளன. சுமார் 2 ஆயிரத்து 792 பேரின் அவலக் குரல்களை உள்ளடக்கிய மேற்படி ஒலிநாடா நீதிமன்ற உத்தரவின் பேரில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



உ

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு

பண்டாரப்புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய

## வருடாந்த மஹோற்சவம் - 2003

கொடியேற்றம்: 31.08.2003 ஞாயிறு பகல் 11.00மணி
சங்காபிஷேகம்: 04.09.2003 வியாழன் பகல் 9.00 மணி
வேட்டைத்திருவிழா: 08.09.2003 திங்கள் பகல் 2.00 மணி
தேர்த்திருவிழா: 09.09.2003 செவ்வாய் பகல் 11.00 மணி
தீர்த்தத் திருவிழா: 10.09.2003 புதன் பகல் 9.00 மணி

பிரதம குரு: ஆகமக் கலாசூரி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள்
(வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில்)

நாரந்தனையம்பதி. - ஆலய பரிபாலன சபையினர்.
(22007)(21-11)


## சமாதான நீதிவானுக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.30

சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ள வட்டுக்கோட்டையைச் சேர்ந்த த.சிவலிங்கத்துக்கான பாராட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அப்பகுதி மக்களால் வட்டு.இந்து வாலிபா சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

சி.சபாநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் நலன்புரிச்சங்கத் தலைவர் ச.வைரவநாதன் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர். (எ-10)


## எண்ணெய்க் காப்பு

சிறுப்பிட்டி பெருதலை சிவன் ஆலயத்தில் இன்று (30.08.2003) சனிக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 3 மணி வரை அடியார்கள எண்ணெய்க் காப்பு சாற்றலாம்.
(21986)(21-14-16) -பரிபாலனசபை.


THE JAFFNA EDUCATION CENTRE
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
சாந்தி சினிமா முன்பாக (மேல்மாடியில்)
SPOKEN ENGLISH WITH GRAMMAR
சிங்களம்
SHORT HAND TYPING ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும்
மிகவும் இலகுவான முறையில் எழுத, வாசிக்க,
கதைக்க கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 31.08.2003
(21988) (25-21-11-16) நிர்வாகி: இ.லோகநாயகி






இசைக் கருவிகள்
சகலவிதமான
இசைக்கருவிகளையும்,
அவற்றின் உதிரிப்பாகங்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
அவற்றை உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ள
நாடுங்கள்.
சாயி சங்கீதா
UG53, பீபள்ஸ் பார்க், கேஸ்வேர்க் வீதி,
கொழும்பு - 11. தொலைபேசி: 2384222, 2445102
பக்ஸ்: 2445102 ஈ-மெயில்: saimusic@sltnet.lk

வெள்ளி விழா காணும் தம்பதிகளை
வாழ்த்துகின்றோம்
30.08.2003
அகஸ்ரீன்-ஜசிந்தா தம்பதியினர்




இருமனம் கலந்த திருமண வாழ்வுதனில்
இல்லறமாம் நல்லறத்தில்
இருபத்தைந்தாம் ஆண்டின்
இனிய நிறைவுதனைக் காணும் இந்நாளில்
இனிய தம்பதியினர் அகஸ்ரீன்-ஜசிந்தா அவர்கள்
இன்பமுடன் என்றுமே பல்லாண்டு காலம்
நீடூழி வாழ்க!

இல.10, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

இனிதுடன் வாழ்த்தும்
பிள்ளைகள்



யாழ். கந்தர்மடம் பழம் வீதி சித்தி விநாயகர் ஆலய
ஆவணிச் சதுர்த்தி

நாளை (31.08.2003) ஞாயிறு விசேட அபிஷேக ஆராதனைகளும், விநாயகப்பெருமானின் வீதியுலாவும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. சிறப்பு நிகழ்ச்சியாக மாலை 6 மணிக்கு தெய்வீகப்பேருரை நடைபெறும்.

தெய்வீகப் பேருரை ☞ "விநாயகர் வழிபாடு"
கலாநிதி மா.வேதநாதன்
இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்.

-பரிபாலன சபையினர்-
பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய திருப்பணிச்சபை.
(21989)(21-16-11)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

பூப்புப் புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (01-09-2003) திங்கட்கிழமை பகல் 09.15 மணிமுதல் 11.07 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபவேளையில்,



எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி

கஸ்தனி அவர்களுக்கு



எமது இல்லத்தில் பூப்புப்புனித நீராட்டுவிழாச் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து, வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள (மாமன்மார்கள்)
திரு.திருமதி செ.ஸ்ரீஸ்கந்தராஜா (ஹொலண்ட்)
திரு.திருமதி செ.ஸ்ரீசௌந்தரராஜா (ஜேர்மனி)
திரு.திருமதி செ.ஸ்ரீசந்தனராஜா (சங்கானை)
திரு.திருமதி செ.ஸ்ரீதவரட்ணராஜா (ஹொலண்ட்)

லோட்டன் றோட், தம்பர் லேன், மானிப்பாய்.
(வேலக்கை பிள்ளையார் கோவில் வீதி)

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி க.கிருஸ்ணசாமி - கிரிசாம்பாள் தம்பதிகள்

★ அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(21846)

உ
ஓம்
விராட் விஷ்வப் பிரம்மனே நம

திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான சுபானு வருடம், ஆவணித்திங்கள் 15ஆம் நாள் (01.09.2003) திங்கட்கிழமை, காலை 9.15 மணி முதல் 10.34 மணிவரை (பழைய நேரம்), சுவாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும், துலா லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

அமரர்கள்
திரு.திருமதி சந்தானராஜா தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன
சந்திரராஜா
அவர்களுக்கும்



திரு.திருமதி இரத்தினசிங்கம தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி
நடேசினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு "வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான (நாச்சிமார் கோயில்) கல்யாண மண்டபத்தில்" திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பையே நேர்முக அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
✳ தங்கள் நல்வரவை விரும்பும்:

சந்தனராஜா குடும்பத்தினர்
586/1, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.

திரு.திருமதி இரத்தினசிங்கம் குடும்பத்தினர்
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

(இருவீட்டார் அழைப்பு) (C/29826)


## அழைப்புக்கட்டளை

இல.16. பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றில்

01. ஐயாத்துரை ரகுனேந்திரன் பெண் பொன்னம்பலம் மகள் ரஜிதா
40/17, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

வழக்கு இல. மணநீக்கம் / 388

- வழக்காளி -

எதிர்

01. ஐயாத்துரை ரகுனேந்திரன்
ஆடுபாவத்தை,
வதிரி, கரவெட்டி

- எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி உமக்கும் தமக்குமிடையேயுள்ள விவாகத்தை ரத்துச்செய்ய இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2003ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 02 ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பவானி சற்குணராசா
வழக்காளியின்
சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
ச.வன்னியசிங்கன்
பதில் பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

2003 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ஆம் நாளாகிய இன்று

ச.வன்னியசிங்கன்
Act. Registrar,
District Court, Jaffna.

(22003)(21-11-16)

# உதயன்

## மொழி அமுலாக்கலில் ஏன் இந்தப் பாரபட்சம்?

தமிழ் மக்களை உரிமைப் போராட்டக்களத்தில் இறங்க வைத்த முக்கிய ஆரம்ப காலச் சம்பவங்கள் என்று மூன்றைக் குறிப்பிடலாம்.

ஒன்று - தமிழ்மக்களின் அரசியல் பலத்தை நிர்மூலமாக்கும் நோக்குடன் பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து மலையகத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு வேட்டு வைத்தது.

இரண்டு - வரலாற்றுக் காலந்தொட்டு தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பல பிரதேசங்களில் அரசு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து அவற்றையெல்லாம் சிங்களப் பிரதேசங்களாக்கியது.

மூன்று - சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஓர் இனத்தின் மொழியைச் சாகடிப்பதன் மூலம் அந்த இனத்தையே சுலபமாக அழித்துவிடலாம் என்பது வரலாறு கற்பிக்கும் பாடம்.

தமிழ்மக்களின் போராட்ட உணர்வை உச்சக் கட்டத்துக்குக் கொண்டுவந்தது, முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா 1956இல் கொண்டுவந்த சிங்களம் மட்டும் சட்டம்தான்.

ஆரம்பத்தில் தமிழ்மொழி உரிமைக்காகத் தமிழர்கள் ஆரம்பித்த சாத்விகப் போராட்டம் பின்னர் தமிழினத்தின் மறுக்கப்பட்ட சகல உரிமைகளுக்கும் விடுதலைக்குமான ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்து வெற்றிகண்டது வேறுகதை.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் பல்வேறு கால கட்டங்களில் படிப்படியாகச் சில உரிமைகள் வழங்கப்பட்டு இறுதியில் சிங்கள மொழிபோல் தமிழ் மொழியும் இந்த நாட்டின் உத்தியோக மொழியாக்கப்பட்டது.

அரசமைப்பிலே தமிழ் மொழியும் உத்தியோக மொழி, அதாவது, அரச கருமமொழி என்று பொறிக்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் தமிழ் மொழி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகிறது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடத் தங்களுக்கு அரசாங்க அலுவலகங்களிலிருந்து சிங்களத்திலேயே கடிதங்கள் வருகின்றன என்று புகார் கூறுகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இப்படி என்றால் தமிழ் பேசும் சாதாரண உத்தியோகத்தர்கள், தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் ஆகியோர் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

தமிழ் மொழி அமுலில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், அரச கருமமொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் டியூ குணசேகரவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஆணையாளர் தமிழ் மொழி அமுலில் ஆர்வம் உள்ளவராக இருந்தபோதிலும், அவரால் என்ன செய்யமுடியும்? தமிழ் மொழியைச் சரிவர அமுல்செய்ய முடியாமல் இருப்பதற்கு அரசாங்க அலுவலகங்களில் தேவையான மொழி பெயர்ப்பாளர்களும், தட்டச்சாளர்களும், தட்டச்சு இயந்திரங்களும் இல்லை என்று ஆணையாளருக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.

தமிழ் மொழி அமுலாக்கல் குறைபாடு என்பது வெறுமனே தமிழ் எழுதுவினைஞர்கள், தமிழ் தட்டச்சாளர்கள், தட்டச்சு இயந்திரங்கள் இல்லாத பிரச்சினை என்று வரையறைப்படுத்திக் கொள்வது தவறு என்று கணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் கடைசி மட்டங்களான பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் பிரிவுகளில் தமிழ் பேசும் நிர்வாகத் தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்மொழி அமுலாக்கல் குறைபாடுகள் இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்றும் கணேசன் தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்பின் 22 ஆவது அத்தியாயத்தின்படி வடக்கு - கிழக்கிற்கு வெளியே 29 பிரதேச செயலகப் பிரிவுகளில் சிங்களத்துடன் மேலதிகமாகத் தமிழ் மொழியும் நிர்வாக மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியினால் அரசாங்க வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு - கிழக்கிலே சிங்கள மக்கள் சிறுபான்மையினராக வாழும் பிரதேச சபைப் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மேலதிக சிங்கள பிரதேச செயலாளர்களும் மேலதிக சிங்கள கிராம சேவையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால். தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராக வாழும் சிங்களப் பகுதிகளில் தமிழ் பேசும் பிரதேச செயலாளர்களும் கிராம சேவையாளர்களும் நியமிக்கப்படவில்லை.

உதாரணத்துக்கு தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவிலும் திம்பிரிகஸ்ஸாய பிரதேச செயலகப் பிரிவிலும் தமிழ் பேசும் மக்கள் முறையே 64 சதவீதம் பேரும், 42 சதவீதம் பேரும் வாழ்கிறார்கள். அப்படியிருந்தும் இந்தப் பிரிவுகளில் மேலதிக தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை கணேசன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஏன் இந்தப் பாரபட்சம்? கணேசன் சுட்டிக்காட்டியிருப்பது அரச கருமமொழி ஆணையாளரின் கண்களைத் திறக்குமா? குறைபாட்டை நிவர்த்திசெய்து தமிழ் மொழி அமுலாக்கலைச் சீராக்க அவர் உடனே நடவடிக்கை எடுப்பாரா?

---

### பாடசாலைகள் படைமுகாம்களாக்கப்பட்டுள்ள நிலையில்

# எதிர்கால கல்விக்காக தமிழ் மாணவர் கருத்துக் கூறுவது எப்படித் தவறாகும்?

### தமிழ் மாணவர் ஒன்றியம் கேள்வி

வவுனியா,ஓக.30

பாடசாலைகள் இராணுவ முகாம்களான நிலையில், தமது எதிர்காலக் கல்வி பற்றி தமிழ் மாணவர் சிந்திப்பதில் - கருத்தை வெளிப்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ் மாணவர் ஒன்றியம்.

வவுனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பொங்குதமிழ்' நிகழ்வில் தமிழ் மாணவர்கள் எவரும் கலந்துகொள்ளக்கூடாது என்று படைத்தரப்பினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, 'தமிழ்பேசும் மாணவர்களின் மனித உரிமை மறுக்கப்படுகின்றதா?' என்ற தலைப்பில் வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியம் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது. அந்தச் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொங்குதமிழ் நிகழ்வில் மாணவர்கள் கலந்துகொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ள கருத்தானது, தமிழ்பேசும் மாணவர்களின் மனித உரிமையை மீண்டும் ஒருமுறை மீறும் சம்பவமாகவே கருதப்படுகின்றது.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக தமிழ் மாணவர் சமுதாயம் கல்வியைத் தொடர்ந்து கற்கமுடியாத நிலைக்கு உள்ளானது. பல ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் தமது அடிப்படைக் கல்வியைக்கூட பெற்றுக்கொள்ளமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாம் இன்னும் அதனை மறந்துவிடவில்லை.

இந்த நிலையில், கடந்த 2002 பெப்ரவரி 23 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசிற்குமிடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின் நோக்கம் இந்த நாட்டில் அனைத்து மக்களும் சமாதானத்துடன் சுமுகநிலையில் வாழவேண்டும் என்பதே ஆகும்.

இந்த வேளையில், தமிழ் மாணவர்களாகிய எமக்கு சமாதான முயற்சிக்கு பங்களிப்புச் செய்யவேண்டிய பொறுப்பும், கடமையும் உண்டு. இந்த வகையில், எந்த ஒரு அரசியல் நடவடிக்கையிலும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையும் எமக்கில்லை.

தமிழ் மாணவர்களின் கல்வி சீரழியக் கூடாது என்பதில் அக்கறை கொண்ட படையினர் இன்னமும் வவுனியா மாவட்டத்தில் 29 பாடசாலைகள் சீருடையினரின் ஆக்கிரமிப்பு காரணமாக இயங்கமுடியாத நிலையில் உள்ளன என்பதை அறியவில்லையா?

சீருடையினரின் ஆதிக்கம் காரணமாக இயங்கமுடியாத நிலையில் உள்ள பாடசாலைகளை மீண்டும் இயக்குவதற்கு படையினர் நடவடிக்கை எடுப்பார்களானால் வவுனியா மாவட்ட தமிழ் மாணவர்களாகிய நாம் அதற்கு மிகவும் நன்றிக் கடனுடையவர்களாக இருப்போம்.

பொங்குதமிழ் என்பது தமிழ்மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வே அன்றி, விடுதலைப் புலிகள் சார்ந்ததோ அன்றி விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடு சார்ந்ததோ அல்ல.

தமிழ்மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும்போது, தமது உயிர் நாடியாகிய விடுதலைக்கு உயிர் கொடுத்த மாவீரர்களை போற்றுவதையோ அவர்களது இலட்சிய கனவுகளைப் பிரதிபலிப்பதையோ எவராலும் தடுத்துவிடமுடியாது.

எனவே, மாணவர்களாகிய எமக்குள்ள பிரச்சினைகளையும் எமது அபிலாஷைகளையும் - எதிர்காலம் பற்றிய சிந்தனைகளையும் இந்த ஜனநாயக நாட்டிலே வெளியுலகிற்கு வெளிப்படுத்துவதில் எதுவித தவறும் இல்லை என நாம் நம்புகின்றோம்.

எனவே இது விடயமாக எவரும் நொந்துகொள்ள வேண்டியதில்லை. என்பதையும் அறியத்தருகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

---

### தொல்புரம் கிழக்கில் ஒரே சமயத்தில்

## கணவன், மனைவி இருவருக்கும் சமாதான நீதிவான் பதவி

சுழிபுரம், ஓக.30

தொல்புரம் கிழக்கில் கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒரேவேளையில் நீதி அமைச்சினால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கந்தசாமி நந்தகுமாரன், நளாயினி நந்தகுமாரன் தம்பதியினரே இவ்வாறு ஒரேசமயத்தில் நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ம-28)

---

### உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு

## ஆசிரியர்களுக்கு இடையில் எழுத்தாக்கத்திறன் போட்டி

### இம்முறை மலையக ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.30

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக்கழகமும் இணைந்து மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், வடக்கு - கிழக்கு ஆசிரியர்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் போட்டி இவ்வாண்டும் வழமைபோல் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் வடக்கு - கிழக்கில் உள்ள 21 கல்வி வலயங்களில் நடைபெற்ற இப்போட்டி இந்த ஆண்டு மலையகத்திலும் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டி அடுத்த மாதம் 24 ஆம் திகதி நடைபெறும்.

இப்போட்டியில் அதிக புள்ளிகளைப் பெறும் ஆசிரியர்களுக்கு உலக ஆசிரியர் தினமான ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் மூவருக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசுகளும், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெற்றிப்பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஒவ்வொரு கல்வி வலயத்திலும் அதிக புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிகள் தொடர்பான விளக்கங்களும் விண்ணப்பப்படிவங்களும் வலயக் கல்விப் பணிமனைகள் ஊடாக சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனைகள் ஊடாக அனுப்பிவைக்கவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

---

## வைத்திய அதிகாரிகள் உள்ளக இடமாற்றம்

சண்டிலிப்பாய்,ஓக.30

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையின் புதிய பொறுப்பதிகாரியாக சங்கானை அரசினர் சுற்றியல்கூறு வைத்தியசாலையில் பணிபுரிந்துவரும் டாக்டர் ஈ.செல்வநாயகம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்தின் பதில் பொறுப்பதிகாரியாகவும் இவர் கடமையாற்றுவார்.

தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவரும் டாக்டர் வி.மகேந்திரன் சங்கானை சுற்றியல்கூறு அரசினர் வைத்தியசாலைக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் இதற்கான பணிப்புரையை கடித மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, இளவாலை அரசினர் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றி வரும் டாக்டர் சி.கணேசலிங்கம் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தின் பதில் பொறுப்பதிகாரியாகவும் கடமைபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளார்.(எ-135)

---

### நாளை

ஆவணி 14
ஞாயிற்றுக்கிழமை
(31.08.2003)
திதி : சதுர்த்தி
பிற்பகல் 4.54 வரை
நட்சத்திரம் : சித்திரை
பின்னிரவு 1.54 வரை
ஆவணி சதுர்த்தி
சுபநேரம் : 9.05 - 10.35
ராகுகாலம்: 4.35-6.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

குணம் என்பது ஒரு கண்ணாடி. அதில் ஒவ்வொருவரும் தமது உருவத்தைப் பார்த்துக்கொள்ளலாம்.

---

## பரீஸில் ஏற்பட்ட மின்சார ஒழுக்கில் எழுதுமட்டுவாழ் தம்பதியர் கருகினர்

வரணி,ஓக.30

பிரான்ஸில் மாடி வீடொன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கில் அகப்பட்டு, எழுதுமட்டுவாழைச் சேர்ந்த வயோதிபத் தம்பதியர் கருகி உயிரிழந்தனர்.

அண்மையில் பிரான்ஸின் பரீஸ் நகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எழுதுமட்டுவாழைச் சேர்ந்த எஸ்.இராசேந்திரம் (வயது 81) மற்றும் அவரது மனைவி பாக்கியலட்சுமி ஆகியோரே உடல் கருகி உயிரிழந்தவர்களாவர்.

மின் ஒழுக்கினால் திடீரென வீடு முழுவதும் தீப்பற்றிக் கொண்டதாகவும் -

அந்தவேளை - மாடி வீட்டிலிருந்த மற்றும் சிலர் அங்கிருந்து குதித்து உயிர் தப்பிக்கொண்டனர் என்றும் - கூறப்பட்டது. (எ-9-170)

---

### சுகாதார திணைக்கள ஊழியரின்

## மேலதிக வேலை நேரத்துக்கான கொடுப்பனவு மட்டுப்படுத்தப்படும்

சண்டிலிப்பாய்,ஓக.30

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களின் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கை யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் பிராந்தியத்திலுள்ள சகல சுகாதாரத் திணைக்கள நிறுவனங்கள் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் மேலதிக நேர வேலைக்காக ஒதுக்கப்படும் நிதி தற்போது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல தரங்களையும் சேர்ந்த ஊழியர்களையும் மேலதிக வேலைக் கடமையில் ஈடுபடுத்தும்போது கூடியவரையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் -

பகல் வேளையில் சிற்றூழியர்களுக்கான மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு எச்சந்தர்ப்பத்திலும் வழங்கப்படமாட்டாது என்றும் - அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (எ-135)

## சாரதி தேவை

★ யாழ். - கொழும்பு சொகுசு பஸ், வான் சாரதி தேவை.
★ நடத்துநர் (கிளினர்) அனுபவம் உள்ளவர்.
★ விடுதி பராமரிப்பாளர்

நற்சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) ஆகியற்றுடன் 31.08.2003 ஞாயிறு பி.ப. 2.30 மணிக்கு 77, கே.கே.எஸ். வீதி, அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும்.

77, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (21979)(21-11-15) "அற்லஸ்"(A.I.C) நிர்வாகி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 04 - 09 - 1918 | மறைவு 01 - 08 - 2003

திருமதி
### சோமசுந்தரம் தங்கரத்தினம்
(சராங்கம்)

**அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் பாசம் நிறைந்த அன்பு முகத்தை எம்மால் மறக்கவே முடியாது! ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் அன்னை அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து பலவழிகளிலும் பங்குகொண்டு உதவிகள் செய்து, ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சின்னப்பிள்ளையார் கோயிலடி, வி.எம்.றோட், பருத்தித்துறை. - குடும்பத்தினர்.
(21907) (26-21-15-11)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.30

தெல்லிப்பழை தென்மேற்கு - விழிசிட்டி வீரபத்திரர் ஆலய பரிபாலன சபைப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-6)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்தின் 559, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு சங்கப் பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## வேலையாள்கள் தேவை

யானை மார்க் சோடா பெட்டிகளை இறக்கி ஏற்றுவதற்கான கூலி ஆள்கள் தேவை.
உடன்தொடர்பு கொள்ளவும்:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(21-11-15) (21971)

## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற், இவற்றிற்கான உதிரிப்பாகங்களும் வேறு வகை மின்சார சாதனங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
கி.சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-29776) (21-15-11)

## சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு!

உங்கள் சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குரிய அனைத்துப் பொருள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**இதோ!.... உங்களுக்காக**

* பேரம் (BAYRUM)
* ஆவ்ரசேவ் (AFTER SHAVE)
* பேப்பர் சேவியற்ஸ் (PAPER SERVIETTES)
* சேவிங் கேக் (SHAVING SOAP)

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
குறிப்பு:- (சத்திரத்துச் சந்திக்கு அருகில்).
☎ 021-222 2567
(11-15-24-21) (C/29731)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 15 - 02 - 1920 | உதிர்வு 31 - 07 - 2003

### அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை

குடும்பத்தின் குலவிளக்கே
குன்றாத மணிவிளக்கே
அன்பின் பிறப்பிடமே
பண்பின் உறைவிடமே
எம்மை விட்டு நீர் பிரிந்து
திங்கள் ஒன்று சென்றாலும்
நாம் வாழும் காலம் வரை
எம் உயிரில் உறைந்திருப்பீர்.

இன்று (30.08.2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.


ஐயனார் கோயிலடி, சுன்னாகம். (21983)(21-11-15)
தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

BPL

வர்ண டெலிவிஷன்கள்
சன்யோ தொழில்நுட்பத்துடன்

**நீங்கள் இதுவரை கண்டிராத காட்சிகள் ! கேட்டிராத நாதங்கள் !**





FYR - 21" வர்ணம்
➤ 1000W PMPO ஒலி
➤ உடனடி காட்சிகள்
➤ AV ஸ்டீரியோ
➤ ஸ்டீரியோ இரட்டை ஸ்பீக்கர்கள்



LWR - 20" வர்ணம்
➤ 40W PMPO ஒலி
➤ அகன்ற துல்லிய காட்சிகள்
➤ 100 நிகழ்ச்சிகள்
➤ VMT-DVD/LD/VCD



KSR - 14" வர்ணம்
➤ 16W PMPO ஒலி
➤ 100 நிகழ்ச்சிகள்
➤ ஹைப்பர்பேண்ட் கேபிள்
➤ AV IN

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:
**சென்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10, தொலைபேசி: 324261- 5, 357283-5, 431770

விநியோகஸ்தரர்: நாராயணா ஹாட்வெயார்ஸ் டிரேடர், யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:
V.K. ராஜரட்னம் & சன்ஸ், யாழ்ப்பாணம். N.S.A எலக்ரோனிக் , யாழ்ப்பாணம்.
சுரண் வோச் & ரேடியோ, யாழ்ப்பாணம். ஹீரோ சுப்பர் கொம்ப்லக்ஸ், நெல்லியடி.
SKY எலக்ரோனிக் சிஸ்டம்ஸ், யாழ்ப்பாணம். ராஜன் சைக்கிள் வோர்க்ஸ், பருத்தித்துறை.

# புலிகளையும், ஜே.வி.பியையும் ஒன்றாகப் பார்க்கும் ஹக்கீமின் அரசியல் முதிர்ச்சியையிட்டு சிந்திக்கின்றோம்

## கலை பண்பாட்டுக் கழக அம்பாறை கிளை அறிக்கை

"குறிக்கோள் இல்லாது இனத்துவேசத்தோடு தமது அரசியல் இலாபத்திற்காக மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் ஜே.வி.பியுடன், உன்னத இலட்சியத்துடன் தமிழர் விடுதலைக்காக தியாகத்துடன் போராடும் விடுதலைப் புலிகளை ஒப்பிட்டு ஒரே தரத்தில் பார்ப்பதாக அமைச்சர் ஹக்கீம் கூறுவது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது."

- இவ்வாறு அம்பாறை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகத் தலைவர் க.ஜனக்குமார், செயலாளர் செ. ஜயந்தன் ஆகியோர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நாட்டில் அமைதிச்சூழல் நிலவுகிறது. சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

"இந்நிலையில், எமது பகுதியில் திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற சதிவேலைகளுக்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம்சாட்ட முயற்சிப்பதில் எதுவித பலனுமேற்படப் போவதில்லை.

"சம்மாந்துறை, சாய்ந்தமருது சம்பவங்களின் உண்மை நிலை தற்போது வெளியாகிக் கொண்டிருக்கிறது. ஆயுதக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் அப்பாவிகளா? அவர்களுக்கு ஹர்த்தால் கடையடைப்பா? பொலீஸ் பாதுகாப்பா?

"புலிகள் ஒருபோதும் முஸ்லிம்களை விரோதமாகப் பார்த்ததில்லை; இம்சித்ததுமில்லை. ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் அரசியலாளர்கள் இனத்துவேசம் மூலம் கட்சியை வளர்க்கத் தலைப்பட்டு விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது" - என்றுள்ளது. (ம)




யாழ். நகர் மேற்கு விழிப்புக்குழு புகையிரத நிலையத்துக்கு அண்மையில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு ஒரு தொகுதி அத்தியாவசிய உபகரணங்களை அண்மையில் வழங்கியது. இது தொடர்பாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் விழிப்புக்குழுவின் ஆலோசகர் சு.செல்வரத்தினம் அப்பகுதிக் கிராம அலுவலர் எம்.பஞ்சலோகரஞ்சனிடம் பொதியைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

### பிந்துனுவெவ முகாம் படுகொலைகள் வழக்கு:

# பொய் சாட்சியமளித்த நால்வருக்கும் 2 வருட கடூழிய சிறைத்தண்டனை!

கொழும்பு,ஓக.30

பிந்துனுவெவ படுகொலைகள் வழக்கு விசாரணையின் போது பொய் சாட்சியமளித்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பேருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் 2வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்தில் சத்தியவாக்குக் கொடுத்துவிட்டு பொய்சாட்சியம் சொன்னதன்மூலம், நீதிமன்றத்தை அவமதித்தார்கள் என்று இந்த நால்வர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டு இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்ற நீதிபதிகள் சரத் அம்பேபிடிய, எரிக் பஸநாயக்க, குமார் ஏகரட்ண ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின், இவர்கள் குற்றவாளிகள் எனக் காணப்பட்டதால் இவர்களுக்கு 2வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆர்.எம். பிரியன்தலால், சுசந்த ரவீந்திரலால், காமினி விஜயசூரிய, நந்தசிறி ராஜபக்ஷ ஆகியோரே சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர்.

அரச தரப்பில் சட்டத்தரணிகள் பிரியந்த நாவின்ன, லக்மலி கருணாநாயக்க ஆகியோரும், எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி இனோகா பெரேரா, எல்.நந்தகுமார, சமன் திஸாநாயக்க ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

### தேர்தல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# காணி வழங்கியதில் பாரபட்சம்: முறைப்பாடு செய்வதற்கு முஸ்தீபு

2001 டிசெம்பர் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்களின் போது கொலைசெய்யப்பட்டோரின் உறவினர்கள் தமக்கு நியாயம் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் செல்வதற்குத் தயாராகின்றனர் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2001ஆம் ஆண்டு தேர்தல் வன்செயல்கள் காரணமாக 65பேர் மரணம் அடைந்தனர். இவர்களது உறவினர்களுக்கு தலா 75ஆயிரம் ரூபா ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டது. கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி இந்நிதி கையளிக்கப்பட்டது. உடதலவின்ன படுகொலைகளில் இறந்தோரது உறவினர்களுக்கும் இந்த நிதி கையளிக்கப்பட்டது.

ஆனால், உடதலவின்னவில் மரணமடைந்தோரின் உறவினர்களுக்கு மட்டும் வீடமைப்பு அதிகாரசபை, பள்ளேகலையில் உள்ள கம் உதாவ காணியில் காணித்துண்டுகளைப் பெற்றுக்கொடுத்தது. இதன்மூலம் தங்களது மனித உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளதென பாதிக்கப்பட்டவர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி, இது சம்பந்தமாக எடுக்கக்கூடிய சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் குறித்து தமது வழக்கறிஞர்களிடம் ஆலோசனைகளைக் கேட்டார்.

இதன்பின்னர், உடதலவின்னவில் இறந்தவர்களின் உறவினர்களைத் தவிர ஏனைய 55பேர்களினதும் உறவினர்களையும் கடந்த 27ஆம் திகதியன்று ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தபோதும், 47 பேர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர். அவர்களும் தமக்குக் காணி கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு வழக்கறிஞர் குழு அவர்களுக்கு ஆலோசனை வழங்கியது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட இம்முறைப்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்கு முகமாக அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்குச் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சாலிய மத்தியூ, மைத்திரிபால சிறிசேன எம்.பி. ஆகியோரும் வழக்கறிஞர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் ஹக்கீமின் பணிப்பில் அம்பாறை மாவட்ட

# ஐந்து தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ.1 கோடி 90 லட்சம்

கொழும்பு,ஓக.30

கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சு அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருக்கிறது.

இதன்படி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பணிப்புரையின் பேரில் இம்மாவட்டத்தின் ஐந்து தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சுமார் ஒரு கோடியே 90 லட்சம் ரூபா உடனடியாக ஒதுக்கப்பட்டு கருத்திட்டங்களை அமுல் நடத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வி, சுகாதார, போக்குவரத்து முதலான துறைகளை மேம்படுத்தவும், வடிகால் அமைப்பை மறுசீரமைக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

கல்முனை தமிழ்ப்பிரிவு, காரைதீவு, நாவிதன்வெளி, திருக்கோயில், ஆலையடிவேம்பு முதலான ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாடசாலைக் கட்டடங்களை அமைத்தல், பழுதடைந்துள்ள வீதிகளைப் புனரமைத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல், மழைகாலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய பகுதிகளில் வடிகாலமைத்தல் முதலான கருத்திட்டங்களுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## அரியாலையில் கணனிப்பயிற்சி

வலி.வடக்கு,ஓக.30

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மனிதவலு அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நடத்தப்படும் கணனிப் பயிற்சிநெறி வகுப்பு அரியாலை சரஸவதி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாருக்குமாக இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

30 பேர் இத்திட்டத்தின்கீழ் ஆறு மாத காலத்திற்கான பயிற்சியினைப் பெறவுள்ளனர். (எ-86)

## கரிகாலனின் தந்தை காலமானார்

களுவாஞ்சிக்குடி,ஓக.30

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கரிகாலனின் தந்தையார் நேற்றுமுன்தினம் காலை களுவாஞ்சிக்குடியில் அவரது இல்லத்தில் காலமானார்.

இவர் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

கரிகாலனின் தாயார் சில மாதங்களுக்குமுன் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூ.மொ.விற்பனை நிலையத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும்

# ஊழல் மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

### ஜனாதிபதி விடுத்தார்

கொழும்பு,ஓக.30

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளன என்று கூறப்படும் ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளன என்று கருதப்படும் ஊழல் மற்றும்மோசடிகள் பலவற்றுள் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக தொழில் சங்கங்களிடமிருந்தும் ஏனைய அமைப்புக்களிடமிருந்தும் எனக்கு பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று குறிப்பிடும் ஜனாதிபதி, இதுகுறித்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி உடனடியாக ஒரு பதிலை சமர்ப்பிக்குமாறு பிரதமரைக் கேட்டுள்ளார்.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணாக இராணுவத்தினரே செயற்படுகின்றனர்

### பத்திரிகையாளர் கேள்விக்கு சம்பந்தன் பதில்

கொழும்பு,ஓக.30

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாகச் செயற்படுபவர்கள் இராணுவத்தினரேயன்றி விடுதலைப் புலிகள் அல்லர் என்று கூறுகின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் இரா.சம்பந்தன் எம்.பி.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பொதுக்கட்டடங்கள் என்பவற்றில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிவிட வேண்டும் என்பதே உடன்பாடு. ஆனால், இன்றும்கூட பாடசாலைகளிலும் கோயில்களிலும் இராணுவத்தினரே முகாமிட்டுள்ளனர். பொது மக்கள் வாழும் இடங்களில் புதிய முகாம்களையும் அமைத்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

குரங்குபாஞ்சான் புலிகளின் முகாம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஆலோசனையைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் ஒரு செயல் இல்லையா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தே சம்பந்தன் எம்.பி. இவ்வாறு கூறினார். (ம)

# ஜேர்மன் நாட்டு தூதுவர் அம்பாறைக்கு திடீர் விஜயம்

அக்கரைப்பற்று,ஓக.30

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கடந்த 27 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இனங்களுக்கிடையே நிலவுகின்ற உணர்வு நிலை தொடர்பாகவும் அரசியல், பாதுகாப்பு, பொருளாதார நிலை, மக்களின் வாழ்க்கை நிலை என்பன தொடர்பாகவும் அவர் பேச்சு நடத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்ட சமூக நலநல்வாழ்வு அமைப்பு (சுவாட்) அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் தலைவரான எஸ்.எச். துரைராசாவுடன் தூதுவர் ஜூரேஜன் எலியாஸ் பேச்சு நடத்தினார்.

பலதரப்பு விடயங்கள் தொடர்பாகப் பேச்சு நடத்தி மாவட்ட நிலைவரம் குறித்து அவர் அறிந்துகொண்டார். தூதுவர் ஜூரேஜன் எலியாஸ் இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு பொதுநல அமைப்புக்களின் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

# சமூக நலனில் மிகுந்த அக்கறை; வர்த்தகருக்கு இருக்கவேண்டும்

### பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஓக.30

வர்த்தகர்களுடைய செயற்பாடுகள் சமூக நலனில் அக்கறை கொண்டனவாக அமையவேண்டும். அதே போல் தத்தமது தொழில் நிறுவனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களின் நலன்களையும் கருத்திற்கொண்டு உரிய விடுமுறை நாள்களில அவர்களுக்கான விடுமுறைகளையும் வழங்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் பொறுப்பாளர் க.சுதாஸ்.

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவிற்கான கூட்டம் சங்கத் தலைவர் க.சண்முகநாதன் தலைமையில் அண்மையில் வர்த்தக சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுடைய நல்வாழ்வுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் இன்று சுமார் 17 ஆயிரத்து 600இற்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணம் அடைந்து புதைகுழிகளில் விதைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் எண்ணங்கள், சிந்தனைகளை மதித்து அவர்களின் மரணத்திற்கான பணியை முன்னெடுக்க வேண்டியது இம்மண்ணில் உள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இந்தவகையில், மேற்படி போராளிகளின் நினைவு தினங்கள் மற்றும் மாவீரர் தினத்தை நல்லமுறையில் அனுஷ்டிக்க வர்த்தகர்கள் ஒத்துழைக்கவேண்டும்.

(எ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில, பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் 14.78 குழியில் அமைந்துள்ள மாடி வீடொன றும் அதனுடன் இணைந்த 11.72 குழி யில் அமைந்துள்ள வீடொன்றும் தனித தனியாகவோ அல்லது ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. வியாபாரத்திற்கு/ காரியாலயத்திற்கு வசதியான இடம். தொடர்பு: 077 6157750. (21973)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபால சிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத் திரைச் சந்தையடி, நல்லூர். (21994)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/- மொத்த மாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாட சாலை வீதி, டச்றோட், உடுவில். 2. பொன்னாலை வீதி, விதானையார் வளவு, மானிப்பாய். (21611)

Prima Broiler இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத திரைச் சந்தையடி, நல்லூர். (21993)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (21920)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Broiler குஞ்சுகள் 01.09.2003 பிற்பகலில் விநியோகிக்கப் படும் முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை யடி, நல்லூர். (சி-29733)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ் சுகள் 01.09.2003 பிற்பகல் விநியோ கிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்ய வும். தொடர்பு: (நல்லூர் வீடியோ சென ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(21995)

## தவறிவிட்டது

எரிக்ஷன் கைத்தொலைபேசி (கறுப்பு நிறம்) யாழ் போதனா வைத்திய சாலைக்கும் ஆஸ்பத்திரி வீதி, ஆரிய குளம் சந்தி, சிவன் கோயில், அம்மன கோயிலுக்குமிடையில் 27.08.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் போதனா வைத்தியசாலை ஊழியர் நுழைவாயில் பாதுகாப்புப் பிரிவில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (21976)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மனோன்மணி என்ப வருடைய தேசிய அடையாள அட்டை பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத தவர்கள் ராசாமில் லேன், கே.கே.எஸ். றோட், கொக்குவில் மேற்கு என்ற முக வரியில் ஒப்படைத்துதவவும்.(21991)

வெள்ளை முத்து பதித்த கைச் சங்கிலி ஒன்று நல்லூர் சுற்றாடல் பகுதியில் 28.08.2003 வியாழக் கிழமை அன்று தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.29, வைமன் வீதி, சந்திரன் சறோஜினிதேவி எனும் முகவரியில் தொடர்பு கொள் ளவும். T.P. - 222 3115. (22011)

## வகுப்புகள்

O/L கணிதத்தில் A,B,C பெறு பேறடைய Paper Class 10 மாதிரி வினாத்தாள்களுக்கு விடையளித்தல். ஆண்டு 9-10 வரையும் துரிதமாக கற பிக்கப்படும். தொடர்பு: இல. 85, சிவன கோயிலடி (சிவன் கோவில் பின் புறம்), திருநெல்வேலி. (21915)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971 இல் பிறந்த, சித்திரை நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள, கிரகபாவம் 42, பட்டதாரி ஆசிரியைக்கு அரச தொழில்புரியும், நற்பண்புள்ள மணமகன் தேவை. கனடாவும் விரும்பத்தக்கது. ஜாத கத்துடன் தொடர்பு: விள.இல. 2003, மே/பா உதயன். (21900)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, யாழ்ப்பாணத்தில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் முக்கிய பதவி வகிக்கும், 33வயது டைய செவ்வாய்க் குற்றமற்ற மண மகனுக்கு பெற்றோர் தகுந்த மண மகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விள.இல. 2004, மே/பா உதயன். (21905)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964, ரேவதி நட்சத்திரம் 2ஆம் பாதம், மனைவியை இழந்த வருக்கு மணமகள் தேவை. தொடர்பு: கு.அருந்ததி, No.9, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட்.(21963)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வருகை தந்து இங்கு சொந்தமாக தொழில் நடத்தவுள்ள, 1968, கார்த் திகை 4ஆம் பாதம், மொத்த கிரக பாவம் 25 உள்ள மணமகனிற்கு படித்த, அழகிய மணமகளை பெற்றோர் விரை வாக எதிர்பார்க்கின்றனர். (அனுப்பப் படும் ஜாதகங்கள் உடன் கவனத்தில எடுக்கப்படும்) தொடர்பு: விள.இல. 2005 மே/பா உதயன். (21947)

## தேவை

தரம் 1 முதல் O/L வரை சகல பாடங்களுக்கும் ஆசிரியர்கள் தேவை.

தொடர்பு:

**சைன்,**
உடுவில்.

(22000) (21-15-11)

**A/L DAY CLASS**
**தமிழ்-2004**
**நிரு**
கோண்டாவில்
சனி, ஞாயிறு. 3.00 p.m.
வெள்ளி 5.00 p.m.
திங்கள் 6.30 a.m.
**திரு.லிங்கம்**
(21834) (12)

## வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஓக.30

இளவாலை சமுர்த்தி செயலணி யினரால் இளவாலைப் பகுதியிலுள்ள வெள்ளவாய்க்கால் புனரமைக்கப் பட்டு வருகின்றது.

இதேவேளை, ஆனைக்கோட்டை சமுர்த்தி செயலணியினரால் ஆனைக கோட்டை வியாவில் வெள்ளவாய்க் கால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக வட்டாரங்கள் இதனைத் தெரி வித்தன. (எ-135)

## சண்டிலிப்பாயில் நலன்புரி நிலையத்தின் தேவைகள் ஆராய்வு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் இடம்பெயர்ந் தோர் நலன்புரி நிலையங்களின் (முகாம்கள்) முக்கிய தேவைகள் மற் றும் அங்கு அவசியமாக மேற்கொள ளப்பட வேண்டிய குடியிருப்புகளின் புனரமைப்பு வேலைகள் பற்றிய ஆய வுகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இப்பிரிவு சமூக சேவை உத்தி யோகத்தர் மற்றும் கிராம அலுவலர் கள் இந்த இடம்பெயர்ந்தோர் நலன் புரி நிலைங்களுக்கு நேரடியாக சென்று இந்த விவரங்களைத் திரட்டி வருகின றனர். (எ-135)

## காசாளர் தேவை

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

**அபீஸ் கோப்பி**
*ஆஸ்பத்திரி வீதி,*
*(மரக்கறி மார்கட் அருகில்)*
(21998) *யாழ்ப்பாணம்.* (21-15-11)

## தமிழ்/ ஆங்கில Computer Typing

- Keyboard
- Speed &Accuracy
- Letters
- Tables
- Printout

உள்ளடங்கலாக

45மணித்தியால செயன்முறை வகுப்புகளுக்கு 1,000/=.

**STCA** (Estd.in 1977)

149(37), சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம.

(21-15-11) (22001)

## காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் சந்தி, இராமகிருஷ்ணா வீதியில், பலாலி வீதிக்கு 50யார் தொலைவில் 14பரப்புக் காணியும், பாம் ஸ்கூலுக்கு அண்மையில் பலாலி வீதியிலிருந்து 50யார் தொலையில் 18 பரப்புக்காணியும், இருபாலை வீதியிலிருந்து பாற்பண்ணைக்குச் செல்லும் வீதியில் 100 யார் தொலைவில் 24 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பங்கிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**S.சுரேஸ்**
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
T.P. 0777 064110

(21-15-11) (21997)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 10 - 1916



மறைவு 30 - 08 - 2002

அமரர்

### றோசமுத்து தொம்மைப்பிள்ளை

அன்பைச் சொரிந்து ஆரா அமுதூட்டி
என்னை எமக்காக்கி எதிர் நீச்சல் போட்ட
துன்ப நினைவுகளைத் தூரத்தே போக்கி விட்டு
இன்பக் கதை பேச எம்மிடத்தே வாரும் அம்மா.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (30.08.2003) சனி காலை 6.30 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்திலும் மாலை 5.30 மணிக்கு மாதகல் லூர்து கெபியிலும் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு இவரின் ஆத்மசாந்திக்காக செபிக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உயரப்புலம், ஆனைக்கோட்டை*

நிரந்தர முகவரி:
*பற்றிமா வீதி, மாதகல்.* (21996) (25-21-1-15)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 - 04 - 1929



இறப்பு 31 - 07 - 2003

### அமரர் சூசைப்பிள்ளை லூர்த்தம்மா

ஆத்மா சாந்தியடைக!

என்றும் உம் நினைவில்:
மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தார், நண்பர்கள்.

211, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (22008) (21-15-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாய் மடியில் 22 - 11 - 1929



இறைவன் அடியில் 3 - 07 - 2003

### திருமதி பொன்னையா நாகரத்தினம்

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (30.08.2003) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

P.ரஞ்சன்
'1A' நாயன்மார்கட்டு முகாமையாளர்
உடையார்லேன்
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(22004)(21-11-15-26)

## மரண அறிவித்தல்கள்

### இராமசாமி வசந்தகுமார்

(யாழ். நியூ சயன்ஸ் ஹோல் அலுவலர்)

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராமசாமி வசந்தகுமார் 2003.08.25 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-பூரணவல்லி தம்பதிகளின அன்பு மகனும் கலாமதியின் அன்புக் கணவரும் துஷாந்தி, பிரசாந், தனுசாந்தி, கபில்சாந், காலஞ்சென்ற லக்ஸ்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமலர்ச்செல்வி (லெபனான்), மதியழகன், திருவருள் (லெபனான்) ஆகியோ ரின் அன்புச்சகோதரனும் மதிவண்ணனின்(லெபனான்) அன்பு மைத்துனரும் மதுஷாவின்(லெபனான்) அன்பு மாமனாரும் நெல்லியடியைச் சேர்ந்த கதிரவேலு-கிருபாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்பாகவுள்ள இல்லத்தில் நாளை (2003.08.31) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*காளுவன்,*
*சுழிபுரம்.* (21990) (25-21-11-15)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### தம்பியையா குணபாலசிங்கம்.

(சமாதான நீதிவானும், வைத்தியரும்)

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பியையா குணபாலசிங்கம் வியாழக்கிழமை 28.08.2003 மாலை இயற்கையெய்தினார்.

அன்னார் அருந்ததியின் அன்புக் கணவரும் அருட்கவி.சீ. வினாசித் தம்பிப்புலவரின் மூத்த மருமகனும் கீதாகரன்(கனடா), ஞானசுதன் (தொழில நுட்பக் கல்லூரி), மாலா(பிரான்ஸ்), கவிநிருபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி ஐயம்பிள்ளை கனகாம்பிகை, பரராசசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலமகள், கருபா, நந்தன் ஆகியோரின மாமனாரும் வினுஷன், மதுஷன், யதுஷா, மதுவித்யா, நிருபன், நிலக்ஷன், ரமாஜினி, கோவர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் சிறீதரன், சிவகாந்தன், டாக்டர் சிவலிங்கராணி, திருமதி ஸ்ரீரங்கநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2003) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பத்துப்பனையடி இந்து மயானத்திற்கு அடக்கம் செய்வதற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.* (சி-29844) (25-21-11-15)

தகவல்:
**அருந்ததி**
(மனைவி)







லெப்.கேணல் ராஜனின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் மாதகல் இளைஞர் சங்கத் திறந்த வெளியரங்கில் கடந்த புதனன்று நடைபெற்றன. இந்த நிகழ்வில் மாதகல் லூர்துமேரி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் செ.ராஜசிங்கம் பொதுசுடர் ஏற்றுவதை முதலாவது படத்திலும் - மாவீரர் பிறைமகளின் தாயார் மாவீரர்களின் படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்துவதை இரண்டாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, வலி.தென்மேற்கு கடற்புலி அரசியல் பிரிவைச் சேர்ந்த மணாளன், சண்டிலிப்பாய் அரசியல் பிரிவைச் சேர்ந்த சு.பா.பவநீதன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். *(படங்கள்: மாதகல் செய்தியாளர்)*

# லெப்.கேணல் ராஜனின் 11 ஆவது அஞ்சலி நிகழ்வு

## புதனன்று மாதகலில் நடைபெற்றது

யாழ்ப்பாணம்,ஓக.30

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்.கேணல் ராஜனின் 11 ஆம் ஆண்டு நினைவு தினமும் மாதகல் பிரதேச மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை மாதகல் இளைஞர் சங்கத் திறந்த வெளி அரங்கில் வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை வலிகாமம் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தி, வலி.தென்மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநீதன், வலி.தென்மேற்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மணாளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து லெப்.கேணல் ராஜனின் உருவப்படத்துக்கும் ஏனைய மாவீரர்களின் உருவப்படங்களுக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன் ஈகச்சுடரும் ஏற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மலர் வணக்கம், அக வணக்கம் என்பன இடம்பெற்றதுடன் தொடர்ந்து உரைகளும் இடம்பெற்றன.

(எ-10-95)

## வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன்

# நிலாவரை கிணற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்க திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.30

நிலாவரை மற்றும் பொக்கணை ஆகிய பகுதிகளிலுள்ள பாரிய கிணறுகளிலிருந்து நிலக்கீழ் குழாய்மூலம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் குடிதண்ணீரை வழங்கும் திட்டம் ஒன்றினை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை முன்னெடுக்கவுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் குடாநாட்டில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் குழாய்மூலம் போதியளவு குடிதண்ணீரை வழங்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்துக்கு நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குமாறு சில வெளிநாடுகளிடம் உதவி கோரப்பட்டிருப்பதாகவும் -

உதவி கிடைத்ததும் உடனடியாக வேலைகள் ஆரம்பமாகும் என்றும் - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-4)

## 'யுனிசெவ்' அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும்

# மிதிவெடியால் பாதிப்புற்றவர்களுக்கான தொழில் முயற்சி கடன் திட்டம் தொடரும்

## சர்வோதய செயற்றிட்ட இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.30

'யுனிசெவ்' அமைப்பின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பு ஆரம்பித்துள்ள மிதிவெடியால் பாதிப்புற்றவர்களுக்கான தொழில்முயற்சி கடன திட்டம், தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுளஎதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை, உடுவில் மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக சர்வோதயம் அமைப்பின் மிதிவெடியால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு செயற்றிட்ட இணைப்பாளர் கோல்டன் கொமறன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே மேற்படி திட்டத்தின் நோக்காகும். இதன்படி வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பயனாளிகள் சுமார் நூறுபேர் தெரிவு செய்யப்பட்டு சுயதொழில் முயற்சிக் கடனாக தலா 12 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட இந்தப் பயனாளிகளுக்கு சந்தைப்படுத்தல், பணமுகாமை, சேமிப்பு போன்றன தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதே குடும்பங்களைச் சேர்ந்த கல்வி கற்கும் சிறுவர்களுக்கு கல்வி சார் உதவிகளையும் சர்வோதயம் வழங்கவுள்ளது. பாடசாலைச் சிறுவர்களுக்கான சீருடை, புத்தகங்கள் மற்றும் நிதியுதவியும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

சிறுவர்களுக்கான இந்தத் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் ஆரம்பமாகவுள்ளது. இப்படி இணைப்பாளர் கோல்டன் தெரிவித்தார்.(எ-9)

## கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும்

# மனிதவள பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கொக்குவில்,ஓக.30

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மனிதவள பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் உடனடியாகத் தேவைப்படும் பயிற்சிகளான மேசன், தச்சுவேலை, குழாய் பொருத்துதல், வீட்டு மின் இணைப்பு, அலுமினிய இணைப்பு போன்றவற்றுக்கும் -

அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான பயிற்சிகளான தன்னியக்க வாகனம் திருத்துநர், மின்னியலாளர், கடைச்சல், வெல்டிங், பெயின்ரர் போன்றவற்றுக்கும் -

நலிவுற்ற குடும்பப் பெண்களுக்கான தொழில்திறன் பயிற்சியான தையல், பாய்பின்னல், மட்பாண்டக் கைத்தொழில், உணவு பொதியிடல், வீட்டுத்தோட்டம், மீன்வளர்ப்பு, கோழி வளர்ப்பு, செங்கல் உற்பத்தி போன்றவற்றுக்கும் -

படித்த யுவதிகளுக்கான பயிற்சிகளான கணனிப் பயிற்சி, தட்டெழுத்து போன்றவற்றுக்கும் விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இந்தப் பயிற்சியைப்பெற விரும்புபவர்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்களூடாகக் குறிப்பிட்ட மாதிரிப்படிவங்களை பூர்த்திசெய்து பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் -

பிரதேச செயலகங்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-76)

# வடக்கு – கிழக்கை பிரிக்கும் முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா கைவிட வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி கோரிக்கை

கொழும்பு,ஓக.30

வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனித்தனியாகப் பிரிக்கும் ஜனாதிபதியின் முயற்சி பேரினவாத அலையைத் தோற்றுவித்து குழப்ப நிலையைக் கொண்டுவரும் ஒரு தீய எண்ணமாகும். இதனைப் புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அந்த நோக்கத்தையும் அதற்கான முயற்சியையும் கைவிடுமாறு நாம் கோருகின்றோம்.

- இவ்வாறு தனது அறிக்கை ஒன்றில் புதிய ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தனித்தனியாகப் பிரிப்பது தொடர்பாக ஜனாதிபதி ஆலோசிப்பதாக அவரது ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே புதிய ஜனநாயகக் கட்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கைப் பிரித்து தனித்தனி மாகாணங்களாக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்திருப்பது அவரின் மூர்க்கத்தனமான பேரினவாத நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றது. இன்றைய யுத்த நிறுத்த சூழலை சமாதான இயல்பு வாழ்வுச் சூழலாக மாற்றுவதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு பற்றியும் அதன் நடைமுறைச் சாத்தியம் சம்பந்தமாகவும் தற்போது பேசப்பட்டுவருகின்றது.

இவ்வேளையில், ஜனாதிபதி வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் பிரச்சினையைக் கிளப்பி இருப்பது பேரினவாத அலையைத் தோற்றுவித்து குழப்ப நிலையைக் கொண்டுவரும் ஒரு தீய எண்ணம் கொண்ட முயற்சியேயாகும். இதனை எமது புதிய ஜனநாயகக் கட்சி மிகவன்மையாகக் கண்டிக்கிறது. அவ்வாறான நோக்கையும் அதற்கான முயற்சியையும் உடன் கைவிடுமாறு கட்சி, ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இன்றைய ஜனாதிபதி தமது முதலாவது பதவிக் காலத்திலும் இரண்டாவது பதவிக்காலத்தில இதுவரை காலமும் வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொண்ட நிலையிலேயே இருந்து வந்தார். வடக்கு - கிழக்கு இணைப்பைப் பிரிப்பது பற்றி சிந்திக்கவே இல்லை.

அத்தகைய ஜனாதிபதிக்கு இப்போது என்ன தேவையும் அவசியமும் ஏற்பட்டு பிரிக்கும் முயற்சிக்கு வந்துள்ளார்? தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண பேச்சுக்கள் தொடரப்படல் வேண்டும். அதேவேளை, வடக்கு - கிழக்கின் புனரமைப்பு, புனர்வாழ்வு, இயல்பு வாழ்வுக்கு ஓர் இடைக்காலக் கட்டமைப்பு தோற்றுவிக்கப்படுவது இன்றைய யதார்த்தமும் தேவையுமாகும்.

இவற்றுக்கு உரிய ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் வழங்கி தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டிய இன்றைய சூழலில், ஜனாதிபதி எதிர்நிலைப்பாட்டில் நின்று வடக்கு - கிழக்கைப் பிரிக்க நினைப்பது சகல சமாதான முயற்சிகளையும் குழப்பும் விஷமத்தமான செயலேயாகும். இத்தகைய முயற்சிகளைக் கைவிடும்படி எமது புதிய ஜனநாயகக் கட்சி ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது.

# ஆள் இல்லாத வேவுவிமானம் கிளிநொச்சியில் பறந்தது!

வவுனியா,ஓக.30

இலங்கை விமானப் படையின் ஆள் இல்லாத வேவுவிமானம் கிளிநொச்சி நகர்ப் பகுதியின் மேலாகப் பறந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளது என்று வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் காலை 7.40 மணியளவில் தென்பட்ட மேற்படி வேவு விமானம் நீண்டநேரம் பறந்து வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது என்று தெரியவருகிறது.

நீண்டநாள்களாக வேவுவிமானம் தனது 'பணிகளை நிறுத்தி இருந்தது. ஆயினும், தற்போது மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வேவுவிமானம் பறந்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## யாழ். குடாநாட்டின் நிலத்தடிக்கீழ்

# குடிதண்ணீரில் நைதரசன் செறிவு; கொழும்பில் 3 நாள்கள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.30

குடாநாட்டில் குடிதண்ணீரில் நைதரசன் செறிவு அதிகரிப்பதைத் தடுக்கும் திட்டம் குறித்து ஆராயும் மூன்று நாள் செயலமர்வு கொழும்பில் இடம்பெறுகின்றது.

உலக வங்கியின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தச் செயலமர்வில் அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

குடாநாட்டில் குடிதண்ணீர்ப் பாவனை பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் விளக்கி யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அங்கு உரையாற்றுவார்.

குடிதண்ணீரில் நைதரசன் செறிவு அதிகரித்துள்ளதால் ஏற்படும் பாதிப்புக் குறித்து மேற்கொள்ளப்படவிருக்கும் ஆய்வு தொடர்பாக இச்செயலமர்வில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

(ம-3)

## காங்கிரஸ் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.30

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், கட்சி சமகால அரசியல் தொடர்பான விசேட கருத்தரங்கொன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 43, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள காங்கிரஸ் இல்லத்தில் நடத்தவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயமூர்த்தி தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.(எ-6)

## கண்டெடுக்கப்பட்ட அரிக்கேன் லாம்புகள்

யாழ்ப்பாணம்,ஓக.30

நாவற்குழிக்கும், செம்மணிக்கும் இடையில் பெட்டியுடன் கூடிய ஒரு தொகுதி அரிக்கேன் லாம்புகள் கண்டெடுக்கப்பட்டு கைதடி முதியோர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரங் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என இல்லத்தின் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

(எ-10)

# தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு கிளிநொச்சியில் பாராட்டு விழா

பிரிட்டிஷ் சுற்றுலாவில் மாபெரும் வெற்றிகளைப்பெற்ற தமிழீழ வலைப்பந்தாட்ட அணிக்கு இன்று கிளிநொச்சியில் விமரிசையான பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

தமிழீழ கல்விக்கழகம், தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியன இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

ஜூலை 20ஆம் திகதி பிரிட்டனுக்குப் புறப்பட்ட தமிழீழ வலைப்பந்தாட்ட அணி, அங்கு தாம் பங்குபற்றிய சகல போட்டிகளிலும் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. இவ்வணி நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து கொழும்பை வந்தடைந்தது.

இன்று கிளிநொச்சிக்குச் செல்லும் இவ்வணியினர், கிளிநொச்சி டிப்போ சந்தியில் வரவேற்கப்படவுள்ளனர். கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் பாராட்டு வைபவம் நடைபெறவுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள கழகங்கள், பொது அமைப்புகள் ஆகியனவும் இதில் பங்குபற்றவுள்ளன.

தமிழீழ வலைப்பந்தாட்ட அணியின் பிரிட்டிஷ் சுற்றுலா குறித்து தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் கருத்துத் தெரிவிக்கையில்,

"பிரிட்டனின் புறோமில் நகரில் நடைபெற்ற 8ஆவது தமிழர் விளையாட்டுவிழாவில் பங்குபற்றுமாறு எமது வலைப்பந்தாட்ட அணிக்கு விடுக்கப்பட்ட அழைப்பையடுத்து நாம் இப்போட்டிகளில் பங்குபற்றினோம்.

"இச்சுற்றுப்போட்டியின் சகல போட்டிகளிலும் வெற்றிபெற்று தமிழீழ வலைப்பந்தாட்ட அணி சாம்பியனாகியது.

"அதேவேளை, பிரிட்டினிலுள்ள வெள்ளையர், கறுப்பினத்தவர்களைக கொண்ட அணிகளுடனான போட்டிகளில் பங்குபற்றவும் எமக்குவாய்ப்பு கிடைத்தது.

"வேல்ஸ் மாநில தெரிவு அணி, ஐரோப்பிய கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களான பிறிக்ஸ்டன், பிரண்ட் கழகங்களுடனும் மோதி எமது அணி வென்றது:

"பெப்ரவரி மாதம் நடைபெற்ற தமிழீழ தேசிய விளையாட்டுவிழாவில் பங்குபற்றிய அணிகளிலிருந்து தமிழீழ வலைப்பந்தாட்ட அணியை நாம் தெரிவுசெய்தோம்.

"முதலில் கிளிநொச்சியிலும் பின்னர், மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடலிலும் இவ்வணிக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி ரதிகலாதேவி ஆனந்த வடிவேல், இந்த வீராங்கனைகளுக்குப் பயிற்சிகள் வழங்கினார்.

"இதுவரை தமிழர் தாயகத்தின் சகல பிரதேசங்களையும் ஓன்றிணைத்து விளையாட்டு அணியொன்றை தெரிவுசெய்ய முடியுமா என்பது சந்தேகத்திற்கிடமாகவிருந்தது.

"எனினும், தற்போதைய சமாதான காலகட்டத்தில் முதல் தடவையாக எமது அணிக்கு வெளிநாட்டு சுற்றுலாவுக்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடந்த 20 வருடங்களில் தமிழர் தாயக அணியொன்று வெளிநாடொன்றுக்கு சென்றமை இதுவே முதல் தடவையாகும்.

"விளையாட்டுத்துறையை வளர்த்தெடுப்பதில் தமிழீழ விளையாட்டுத்துறையும் புலம்பெயர்ந்த தமிழர்களும் காட்டும் அக்கறை மகிழ்ச்சிக்குரியது.

"இங்கிலாந்து தமிழர் ஒன்றியம் போன்று ஏனைய அமைப்புகளும் ஆதரவளித்தால் தமிழீழத்தின் ஏனைய அணிகளும் முன்னேற்றமடையும்.

"யுத்தம் நிலவினாலும் இல்லாவிட்டாலும் வீரமும் விவேகமும் மிக்கதாக இளைய தலைமுறை இருக்க வேண்டுமென்பதே தலைவரின் எதிர்பார்ப்பு.

"இலங்கையின் தேசிய அணிகளில் வடக்கு-கிழக்குத் தாயக தமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவது அரிதாகவுள்ளது. 'வடக்கு-கிழக்கு பிரதேச அணிகளை வளர்த்தெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து குறிப்பிடத்தக்க உதவிகள் கடந்த காலத்தில் கிடைக்கவில்லை.

"சாதாரண சிங்கள மக்களின் கருத்து அடிப்படையில் இப்படி ஏற்பட்டது என நாம் எண்ணவில்லை. இலங்கை ஆட்சியாளர்களின் புறக்கணிப்பே இதற்குக் காரணம். இனிவரும் காலங்களில் ஆட்சியாளர்களின் போக்கில் மாற்றம் ஏற்படவேண்டும்." என்றார்.

தமிழீழ வலைப்பந்தாட்ட அணியின் முகாமையாளராக ரொஹான் ராஜசிங்கம் கடமையாற்றினார்.

அணியின் பயிற்றுநரான ரதிகலாதேவி கருத்துத் தெரிவிக்கையில், "நான் பயிற்சி வழங்கிய அணிகளில் இவ்வணி மிகத் திறமையானது; மதிநுட்பமானது. எளிதில் புரிந்துகொள்பவர்களாக இவ்வணி வீராங்கனைகள் உள்ளனர். பிரிட்டிஷ் சுற்றுலாவில் இவர்கள் வெற்றிகளைக் குவிப்பர் என்று ஆரம்பத்திலேயே எதிர்பார்த்தேன்" என்றார்.

அணித்தலைவி செல்வி நிஷாந்தி ராஜரட்ணம் கருத்துத் தொிவிக்கையில் "முதல் தடவையாக எமக்கு வெளிநாட்டில் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. பிரிட்டன் வாழ் புலம்பெயர்ந்த தமிழர்கள் எம்மை நன்கு உபசரித்து ஆதரவளித்தனர்.

"அவர்களை விட்டுப்பிரிந்துவரும்போது மிகவும் கலைவயாக இருந்தது" என்றார்.


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## பகிரங்க ஏல விற்பனை

சங்க லொறிக்கு பாவிக்கப்பட்ட ரயர், ரியூப்புகள் சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

திகதி:- 05.09.2003 வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி.

01. 750 - 15 ரயர்கள் ரியூப்புகள்
02. 825 - 20 ரயர்கள் ரியூப்புகள்
03. 900 - 20 ரயர்கள் ரியூப்புகள்

ஏலத்தில் பெறுபவர்கள் பணத்தினை முழுமையாக அன்றைய தினமே செலுத்தி பொருள்களை பெற்றுக்கொள்ளவேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

(C/29850) (12-17)



## நன்றி செலுத்தும் வழிபாடு

மண்ணில் 05 01 1936



விண்ணில் 25 07 2003

### அமரர் லெஸ்லி சுகேந்திரன் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்புடையீர்!

கடவுளின் மகிமைக்குள் பிரவேசித்த எங்கள் குடும்பத் தலைவர் திரு.லெஸ்லி சுகேந்திரன் செல்வநாயகம் அவர்களது வாழ்வுக்காக நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (30.08.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாத்தனை,
கவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

-குடும்பத்தினர்.

(22020) (12-17)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு



### செகநாயகம்பிள்ளை சிவஞானசுந்தரம்

(ஞானம்)

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெரு (தெணி) வைச் சேர்ந்த இவர் 31.07.2003 வியாழக்கிழமை இந்தியாவில் சென்னைமாநகரில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செகநாயகம்பிள்ளை - அன்னப்பாக்கியத்தின் மூத்த புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வீரவாகரன். பாஸ்கரன். ஜானகி அம்மாள். இந்திராதேவி. லதா. ரமேஸ். சுரேஸ். பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னராசா. ஜெகதாம்பிகை. மகேந்திரம். ஜெகசோதி. ஜெகதீஸ்வரன். கண்ணன். பாலசுந்தரம். இரத்தினசபாபதி. ஜெகதீஸ்வரி. முத்துலட்சுமி. நவலட்சுமி. விஜயலக்ஷ்மி. சந்தனமாலா. சந்திரமாலா. காலஞ்சென்ற வசீகரநாதன். பரஞ்சோதி ஆகியோரின் மூத்த சகோதரருமாவார்.

அன்னாரது 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு இன்று (30.08.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்து பிரார்த்திக்குமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.ஜெகசோதி, செம்பருத்தி,
பிரதான வீதி, பருத்தித்துறை.

-மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

(C/29851) (12-17)


# மாவட்ட கிரிக்கெட் அணிக்கான தெரிவுக்கு 28 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக,30

யாழ்மாவட்ட கிரிக்கட் அணிக்கு வீரர்களை தெரிவுசெய்வதற்கான பயிற்சிகளுக்கு 28பேருக்கு யாழ் மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற ஆட்டங்களில் திறமையை வெளிக்காட்டியவர்களில் இருந்து யாழ்மாவட்ட அணிக்கான பயிற்சிக்கு வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் முதலாம் திகதி மாலை 4 மணி முதல் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பயிற்சிக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

ப.லவேந்திரா. ச.காண்டீபன், ச.மதூசன், ரி.கௌரிபாகன், என்.சிவராஜா, என்.ஜெயராஜா, எஸ்.லக்சுமிகாந்த், எ.யசிந்தன், எ.எம்.லொயலாஸ், ச.அகிலன்-

ச.விமலன், க.றொஹான், ரி.துஸானந்த், ஆர்,ஷார்ஜகான், வி.றஞ்சித்குமார், அன்ரன்-நயனஸ், ஆர்.கிருஸ்ணராசா, என்.சுதேஸ்குமார், எஸ். உமாநாத், ரி.றொபேசன்-

வி.மணிவண்ணன், எஸ்.தனுஸ்காந்தன், எஸ்.பாஸ்கரன், எஸ்.ஜெகஜீவன், என்.நிஸாகரன், ஆர்.சாள்ஸ், இ.ஐங்கரன், எஸ்.துஸ்யந்தன், றொசான், எஸ்.கிசோக்குமார்.

பயிற்சிக்கு அழைக்கப்பட்ட அனைவரையும் பயிற்சிக்கான உபகரணங்களுடன் மைதானத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்மாவட்ட கிரிக்கட் சங்க செயலாளர் எஸ். விமலதாசன் கேட்டுள்ளார். (ம-5)


## மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்!

விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு




சென்னை
அண்ணா பல்கலைக்கழகத்துடன்
இணைந்த
ஆறுபடை வீடு பொறியியற்கல்லூரி,
பொறியியல் பட்டப்படிப்புக்கான
(கல்வியாண்டு 2003/2004) விண்ணப்பத்திகதி

எதிர்வரும் 05.09.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது!

என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

☞இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விடாமல் சான்றிதழ்களுடன் உடனே தொடர்பு கொள்ளவும்.

(27)

S.நிரஞ்சன், N.N EDUCONSULT
இல. 181/1, W.A சில்வா மாவத்தை,
கொழும்பு - 06. ☎ 075 558844, 0777 759211


## உதைபந்தாட்டம்

மாவீரர்கள் நினைவாக பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★மாலை 4.00 மணி-யாழ் சென். அந்தனீஸ் வி.க.எதிர் அல்வாய் மனோகரா வி.க.

★மாலை 4.30 மணி-யாழ். கலைவாணி வி.க. எதிர் வதிரி டயமன்ஸ் வி.க. (ம-5)

## கரப்பந்தாட்டம்

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★இரவு 7.00 மணி-நாயன்மார்கட்டு பாரதி வி.க.எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.

★இரவு 7.30 மணி-கெருடாவில் அண்ணா வி.க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.க. (ம-5)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி பொருளியல் விரிவுரையாளர்
**திரு.விசாகசுந்தரம் அருளானந்தம்**
அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில்
முதுகலைமாணி பட்டம் பெற்றதையிட்டு,
பாராட்டுவதுடன் இவர் மேலும் பட்டங்களைப் பெற்று
பல்லாண்டு காலம் கல்வி உலகிற்கு
சேவையாற்ற வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

*பட்டப்படிப்புகள் கல்லூரி,*
*57/13, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(22034) (32-12-29-14)
இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.



## சங்கத்தானை - சாவகச்சேரி
## ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான
பரிபாலன சபை
## பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய பரிபாலன சபையினரின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக அங்கத்தவர் தெரிவும் நாளை (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்பாள் அடியார்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(22040) (12-14-29) - ஆலய பரிபாலன சபையினர்.





உ
நீர்வேலி
## அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்
### சுபானு வருட மஹோற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் ஆவணித் திங்கள் 14ஆம் நாள் கொடியேற்றத்துடன் எம் பெருமானின் மஹோற்சவம் ஆரம்பமாகிறது.

| | | | |
|---|---|---|---|
| 31.08.2003 | (ஞாயிறு) | கொடியேற்றம | மு.ப.11 மணி |
| 07.09.2003 | (ஞாயிறு) | வேட்டைத் திருவிழா | இரவு 8 மணி |
| 08.09.2003 | (திங்கள்) | சப்பரத் திருவிழா | இரவு 8 மணி |
| 09.09.2003 | (செவ்வாய்) | தேர்த் திருவிழா | காலை 8 மணி |
| 10.09.2003 | (புதன்) | தீர்த்தத் திருவிழா | காலை 10.00 மணி |
| 11.09.2003 | (வியாழன்) | பூங்காவனத் திருவிழா | |

உற்சவ காலங்களில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை
**தெய்வீகப் பேருரைகள்** -
வழங்குபவர்கள்: **பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
உபயகாரர்களும்,
கோவில் பரிபாலன சபையினரும்.

*பிள்ளையாரின் திருவருளுக்காகப் பிரார்த்திப்போர்:*
- பவானி களஞ்சியம், நீர்வேலி.
- ஸ்ரீ மஹாவிஷ்ணு, 72, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- கஜமுகா ரேட் சென்ரர், 281, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(22028) (32-12-14-29)



உ
மாவை - கொல்லங்கலட்டி
பிள்ளையார் கோயில்
## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

அடியார்களே!
நாளை (31.08.2003) ஞாயிறு காலை விநாயக சதுர்த்தி - அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும்.

## சிவன் கோயில் பரிமேலழகர் உற்சவம்

05.09.2003 வெள்ளிக்கிழமை காலை ஆவணி மூல நன்னாளை முன்னிட்டு அபிஷேகம் நடைபெற்று நரியைப் பரியாக்கிய சிவபிரான் குதிரைமேல் ஆரோகணித்து வரும் காட்சி இடம்பெறும்.

காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரவும். இரு நாள்களிலும் கோயிலுக்கு அடியார்கள் அழைத்துச் செல்லப் படுவர்.
(22042) (32-12-14-29) -அறங்காவலர்.


# மரண அறிவித்தல்

## கந்தையா கனகசுந்தரம் (குமாரசாமி)

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசுந்தரம் நேற்று (29.08.2003) வெள்ளிக கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் சின்னத்தம்பி கந்தையா, சேதுப்பிள்ளை ஆகியோரின் மகனும் சிவசோதியின் அன்புக் கணவரும் திருமதி சித்திராதேவி, இளங்கோ (கனடா), திருமதி நேபி ரேமா, சின்னையா (கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), முருகதாஸ், சிவராசா (லண்டன்), விக்கினேஸ்வரமூர்த்தி, சோமாஸ்காந்தன் (ஜேர்மனி), சிவஅன்பு (லண்டன்), சதாசிவம் (சுவிஸ்) காலஞ்சென்ற பாலகுமார் (பதுமன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகன் (இந்தியா), சிவரூபன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), ஸ்ரீவதனி (தேசிய சேமிப்பு வங்கி,யாழ்.), கோபிநாத், இளவரசன் (கனடா), காண்டீபன், சங்கீதா, லதீஸ்குமார், சோபனா, தாரகா (லண்டன்), நிஷாந் (லண்டன்), குமணன், பிரணவன், தினேசினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற விதானையார் சதாசிவம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை வடக்கு,*
*கொடிகாமம்.* (சி29861) (32-12-14-29) தகவல்: க.விக்னேஸ்வரமூர்த்தி (மகன்)


## புலமைப் பரிசில் - 2003

பரீட்சை - 46 இல்
அதிகூடிய புள்ளிபெற்றோர்
- ★ஆ.யேனுகானந - 182
- ★த.அனோஜன் - 182
- ★பு.மயூரி - 177
- ★ர.சிந்துஜன் - 171

(22038)

அடுத்த பரீட்சை:
31.08.2003 ஞாயிறு காலை 8.30.

தரம் 1 முதல் 0L வரை 3ஆம் தவணைக்கான வகுப்புகள் ஆரம்பம் - 30.08.2003 (சனி)

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



## IBMS

4ஆவது வருட பூர்த்தியில்...
விசேட கட்டணத்தில்..
1000/=
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
30.08.2003 காலை 9.00 மணி
01.09.2003 மாலை 3.00 மணி
Diploma in Business Application (Include Ms Office)
Diploma in Digital Science (Include Programming)

(22029) (29-12-14) Director (Ad)



## SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY:-
**MR.M.A.HARI**
★ புதிய பிரிவு ஆரம்பம் ★
31.08.2003 ஞாயிறு காலை 8 மணி
SUNDAY, SATURDAY } 8 a.m - 9 a.m
**HARY'S INSTITUTE**
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (22036) (32)



## NEW SCIENCE CENTRE

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
**BIOLOGY**
புதிய பிரிவு
**BY.நாகநாதன்**
ஆரம்பம்: 02-09-2003
செவ் - 9.30 - 12.30 a.m. & 1.30 - 4 p.m.
**CHEMISTRY**
புதிய பிரிவு
ஆரம்பம்:- 01-09-2003
திங்கள் 11.30 a.m.
**BY. அன்பழகன்**
(22013) (32-12-14-29)



## லஷ்சுமி சினிமா

இணுவில்
31 வரை
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த
**தமிழன்** (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
01.09 முதல்
முரளி நடித்த
**காதலுடன்**
(22039)



## நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல்
மம்முட்டி, அபிராமி, ராதாரவி, வடிவேல் நடித்த
**கார்மேகம்**
தினசரி காட்சி கள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(31-12-18) (C29232)




## நிறஞ்சனாஸ்

சங்கானை
சரத்குமார், சிம்ரன் நடித்த
**அரசு**
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**THE PEACE KEEPER**
தினசரி 7.45 இற்கு.
(C29213) (31-12-18)



## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
சித்தார்த், ஹரணி, விவேக
**பாய்ஸ்**



10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரீக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C29829)



## லிபேட்டி அச்சுவேலி

புதிய வெளியீடு
ஸ்ரீகாந்த், த்ரிஷா, வையாபுரி
**மனசெல்லாம்** (ரீல்ஸ்)
தினசரி : 11.00. 3.00. 7.00
(C29313)


# மரண அறிவித்தல்கள்

## கணபதி கந்தையா

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தையா அவர்கள் 25.08.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சங்கீத ஆசிரியர் **K.K.** கிருஸ்ணபிள்ளையின் அருமைச் சகோதரனும் அன்னலட்சுமி, நடராஜா, விமலாம்பிகை, காலஞ்சென்ற பாலச்சந்திரன், சாரதாம்பிகை (கனடா), திருவாதரன் (பிரான்ஸ்), நிர்மலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜா, மல்லிகாதேவி, இராசலிங்கம் (பிரான்ஸ்), ரஜனி, ஜெயரட்ணராஜா (கனடா), தங்கராணி (பிரான்ஸ்), ஞானசேகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் **Dr.** கோகுலேந்திரா, சிவகாமி,மகேந்திரன், கருணாகரி (லண்டன்), விஜேந்திராளு சிவதர்சினி (பிரான்ஸ்), ராஜேந்திரா, பத்மேந்திரா, மதிவதனி, காலஞ்சென்ற காயத்ரி, கலைவாணி, சோபனா, பாலமதி, காலஞ்சென்ற பாலசெந்தூரன், பாலேஷன், கௌதமன், பிரியங்கா, ஜெனனி, மகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிராமி, அபிஷா ஆகியோரின் ஆசைப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை மனம்பேரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2003) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*D 55/10, மாளிகாவத்தை தொடர்மாடி,*
*கொழும்பு-10. தொ.பே:2439808* (22044)
தகவல்: திரு.ஜ.செல்வராசா

## திருமதி பார்வதி சபாபதி

கட்டுப்பலானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை புகுந்த இடமாகவும் சங்குவேலியை வசிப்பிமாகவும் கொண்ட திருமதி பார்வதி சபாபதி அவர்கள் நேற்று (29.08.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர்-பர்வதம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் சபாபதி அவர்களின் பாசமிகு மனைவியும் சின்னத்துரை (பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), மனோன்மணி, மகாதேவி, இரத்தினசிங்கம், அன்னரத்தினம், ஆனந்தசிவம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசேஸ்வரி (ஓய்வு பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்), வேலாயுதம் (ஓய்வுபெற்ற பொலீஸ் திணைக்கள உத்தியோகத்தர்), வைரமுத்து, தவமணிதேவி, கதிர்காமத்தம்பி, சந்திராதேவி, ஆறுமுகசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும் குகன் (பௌதிக விஞ்ஞானம், இறுதியாண்டு - யாழ்.பல்கலைக்கழகம்), மயூரன் (மருத்துவபீடம், 3ஆம் ஆண்டு - யாழ்.பல்கலைக்கழகம்), திருமகள், மனோகரி, கலைமகள், திருக்கேஸ்வரி, பரமசிவன், அபிமன்னன், உதயனன், நந்தினிதேவி, மாயவன், பிறேமக்குமார்( கலைப்பீடம், 2ஆம் வருடம் - யாழ்.பல்கலைக்கழகம்), சசிகுமார், கோகிலகுமார், கிருஸ்ணகுமார், இந்திரகுமார், பிரதாபன், முரளிதரன், தர்சினி, சுபாங்கி, சுபாகரன், பிரணவன், காயத்திரி, சிவாஜினி, நிசாந்தி, துளசி, அஜீத்தா, கிரிஜா, உதயபாலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திவாசினியின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2003) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிபபாய் பிப்பிலி மாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (22044) (29-12-14)
தகவல்: ச.சின்னத்துரை (மகன்)

## திருமதி சரஸ்வதி கணநாதன் (மலர்)

கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரஸ்வதி கணநாதன் நேற்றுமுன்தினம் (28.08.2003) வியாழக கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - சிந்தாமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கணநாதனின் அன்பு மனைவியும் சரோஜினி, சண்முகானந்தம் (கனடா), வசந்தகுமாரி, வசந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயபாலசிங்கம், உதயகுமார், தயாநிதி (இந்தியா), கிருபாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மைதிலி (கலாசார அலுவலர், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்), ஸ்ரீஸ்கந்தராஜா (இளங்கோ-லண்டன்), வைதேகி (ஆசிரியை,யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்,புங்குடுதீவு), ஜானகி (ஆசிரியை, கல்மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி விசாகரூபன் (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), தேவதாசன் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பொதுவைத்தியசாலை, திருகோணமலை), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கரிஷ்மாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள அவரது இல்லத்தில் நாளை (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/37,இரண்டாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,கந்தர்மடம்.*
*தொலைபேசி:222 5363* (22045) (12-14-29)
தகவல்: த.கணநாதன (கணவர்)

## நல்லையா நித்தியானந்தன்

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த நல்லையா நித்தியானந்தன் அவர்கள் 28.08.2003 வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (22025) (12-14-29)
தகவல்: நித்தியானந்தன் நல்லையா (மகன்)

## வைத்தியலிங்கம் மகேசதாசன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைத்தியலிங்கம் மகேசதாசன் அவர்கள் 28.08.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலக்சுமியின் அன்புக் கணவரும் மாலதி (லண்டன்), சிவகுமாரன் (லண்டன்), குகநேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அரங்கண்ணன் (லண்டன்), றஜினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ஏகாம்பதாசன், காலஞ்சென்ற இராமநாததாசன் மற்றும் கதிர்காமதாசன், சிவகுகதாசன், கனகாம்பிகை (ஆஸ்திரேலியா), திருமதி அன்னபூரணிஅம்மா மீனாட்சிசுந்தரம், நடேசதாசன் (மாவீரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யாதவன், கதிர்ஈஸ்வர் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.8.2003) சனிக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்வெட்டித்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்வெட்டித்துறை.* (22045) (12-14-29)
தகவல்:- வை.கதிர்காமதாசன் (சகோதரன்)

# விதி முறைகளுக்குப் புறம்பாக வீதி அபிவிருத்திப் பணிகள்

## மேற்கொள்ள உலக வங்கி அனுமதி

கொழும்பு,ஓக.30

வீதி அபிவிருத்திப் பணிகளை தற்போது நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்குப் புறம்பாகவும் மேற்கொள்ளலாம் என்று அரசுக்கு உலக வங்கி அனுமதியளித்துள்ளது.

- இவ்வாறு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது நடைமுறையிலுள்ள கேள்விப்பத்திரம் கோரல் போன்ற அரசின் அடிப்படை சட்டங்கள் மற்றும் நிர்வாக விதிமுறைகளால் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகள், வருடக்கணக்கில் தாமதமடைந்து வருகின்றன.

இத்தகைய தாமதங்களைத் தவிர்க்கும் வகையில் சட்டவிதி முறைகளுக்குப் புறம்பாக இலங்கையில் விரிவான. வீதி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உலக வங்கி இலங்கை அரசுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

உலக வங்கியின் உதவி பெறும் நாடொன்றுக்கு இத்தகைய அனுமதியொன்று வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

அண்மையில் பெறப்பட்ட நிதியுதவிகளை, அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு சரியான விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைபற்றி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களான கே.என்.சொக்ஸி, மிலிந்த மொறகொட ஆகியோருடன் உலக வங்கியின் தென்னாசிய பிராந்தியங்களுக்கான சிரேஷ்ட உப தலைவர் பபுல் பத்தேல் நடத்திய பேச்சின் பின்னரே அரசுக்கு இத்தகைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒன்பது பெரும் வீதிகள் மற்றும் பிரதேச மட்ட வீதிகளின் துரித அபிவிருத்தி சம்பந்தமாக, இரண்டு மாதங்களுக்குள் செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப் படவுள்ளதாக அரசின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அடிப்படைச் சட்டவிதிகள் மற்றும் நிர்வாக விதிகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் இத்துரித அபிவிருத்தித் திட்டத்தில் அமையும் சகலவித வரவு-செலவுக் கணக்குகளும் அரசின் தீவிர பரிசீலனைக்கும் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படவுள்ளது.

### கருத்தரங்கு

கைதடி,ஓக.30

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற விருக்கும் ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு சமூகக் கல்விப் பாடத்திற்கான பயிற்சிக் கருத்தரங்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற உள்ளது.

### செப்.30....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளைப் பிரிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசமைப்பு சட்டரீதியாக ஆராய்ந்து வருகிறார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு அமைப்புகள் வடக்கு - கிழக்கை தனித்தனியாகப் பிரிக்கும்படி ஜனாதிபதியைக் கோரியுள்ளன.

- இவ்வாறு அவர் கூறினார்.

### அமைச்சரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேநீர் அருந்துவதற்காக உணவு விடுதி ஒன்றுக்கு சென்றவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த அவரது மனைவி மாத்தறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் எவ்வாறு நடந்தது என்பது குறித்த விசாரணைகளை பொலீஸார் முடுக்கி விட்டுள்ளனர். (ஒ-3-4)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடன் இக்குழுவினர் கலந்துரையாடுவர்.

பின்னர் எதிர்வரும் 2ஆம் திகதி சுவிஸ் அரசின் ஆசிய பிராந்தியத்துக்குப் பொறுப்பான அதிகாரியுடன் கலந்துரையாடும் குழுவினர், 3ஆம் திகதி கொழும்புக்குத் திரும்புவர். (ஒ-3)

### மீள் குடியமர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோரை மீளக்குடியமர்த்துதல், அதி உயர் பாதுகாப்பு வலய விவகாரம், ஏனைய இனங்களைச் சேர்ந்தோரின் பாதுகாப்பு போன்ற விடயங்களே அடுத்த கட்டப் பேச்சில் முக்கியமாக ஆராயப்பட்டவிருக்கின்றன.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது யோசனைகளை விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் கையளித்த பின்னர் அது தொடர்பாகப பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்தப்படவுள்ளது - என்றார் அவர். (ஒ-3-4)

### நல்லூரில் அடி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த மாணிக்கம் பகீரதன் (வயது20), புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த எட்வேட் மதிவண்ணன் (வயது24), சுன்னாகத்தைச் சேர்ந்த மன்மதராஜா செல்வராஜா (வயது22) ஆகிய மூவருமே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இம்முறை நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ தினங்களில் ஆலய சூழலில் கைகலப்புகள், அடிதடிகள் எதுவும் இடம்பெற்றிருக்காத போதிலும், வைரவர் பொங்கல் தினமான நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### தேசிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேற அவர் தயாரென்றால் தேசிய அரசின் பிரதமர் பதவியை அவருக்கு வழங்கமுடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இதற்கான அழைப்பையும் ஜனாதிபதி விடுத்திருக்கிறார்.

இந்த அழைப்பை விடுப்பதற்கான காரணங்களை விளக்கிக் கூறியிருக்கும் ஜனாதிபதி, ஐ.தே.கவிலிருக்கும் சிரேஷ்ட உறுப்பினர் டிரோன் பெர்ணாண்டோ எனவும் வர்ணித்திருக்கிறார்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்னர் அது குறித்து பிரதமர் ரணிலிடம் கூறிய அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, ஜனாதிபதியுடன் பேசப்பட்ட விடயங்கள் குறித்து பின்னர் விளக்கினார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

# ரயில் வேலைநிறுத்தத்தை கைவிடுவதற்கு இணக்கம்

கொழும்பு,ஓக.30

எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவிருந்த ரயில் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகேயுடன் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பேச்சுக்களிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்று ரயில்வே அதிகாரசபையின் தலைவரான ஹேமசந்திர மனதுங்க தெரிவித்திருக்கிறார்.

தொழிற்சங்கங்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு மூன்று வாரங்களில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் லொக்குகே உறுதியளித்திருக்கின்றார்.

# மனையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச சபையின் அனுசரணையுடன் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட மனைப் பொருளியல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிய பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி இன்றும் நாளையும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

சங்கத் தலைவர்ந.பாலசந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார். (ஒ-117)

### எமது ஆலோசனைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் பரிஸில் கூடி ஆலோசனைகளைத் தயாரிக்க மேற்கொண்டுவரும் முயற்சி, அரச உயர் பீடத்துக்கு உள்ளூர அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும். ஏனெனில், ஆலோசனைகளைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசின் முன்னாள் சட்டமா அதிபர் சிவாபசுபதி மற்றும் பிரதமர் ரணில், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்குச் சட்டம் கற்பித்த பேராசிரியர் சொர்ணராஜா போன்றவர்கள் எங்களுக்கு உதவ வந்திருந்தார்கள்.

இணைந்த வடக்கு-கிழக்கை எமது தாயகமாகக் கொண்டு உரிமைப் போராட்டத்தை நாம் மேற்கொண்டு வரும்வேளையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையார், இணைப்புக்கு வேட்டுவைத்தாற்போல் வடக்கு-கிழக்கு பிரிப்பு என்ற முயற்சியில் இறங்கியுள்ளார். அதற்காக அமைச்சர் ஹக்கீம் போன்றவர்களைப் பயன்படுத்தும் நோக்கம் அவருக்கு இருக்கலாம்.

கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற கொலைகள், அவற்றால் ஏற்பட்ட பதற்றம் ஆகியவற்றுக்கு அடிப்படையில் முஸ்லிம் அரசியல் தலைவர்களே பொறுப்பு.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் தமது பகுதியைச் சார்ந்த ஒருவரே தமக்குத் தலைவராக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், தற்போது முஸ்லிம்களின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர் அல்லர். அதனால் தனது தலைமைத்துவத்துக்கும் அரசியல் வாழ்வுக்கும் கடும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று அவர் அஞ்சுவது இயற்கை. இந்தப் பின்னணியிலேயே கிழக்கில் கலவரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அவற்றில் குளிர்காய்பவர்கள் பலர்.

கிழக்கிலிருந்து பொலீஸுக்கு ஆள் சேர்க்கும் முயற்சி மிகவும் அபாயகரமானது. இப்படித்தான் முன்னர் ஊர்காவல் படை திரட்டப்பட்டது. நாட்டின் பாதுகாப்புப் படையினரும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து கிழக்கில் மேற்கொண்ட தமிழ் இனப்படுகொலைகள் கொஞ்சநஞ்சமல்ல.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பது விடுதலைப் புலிகளாகிய எமது பொறுப்பு. முஸ்லிம் மக்களிடையே ஆயுத கலாசாரத்தைத் தோற்றுவிக்க முயலும் சக்திகளை இனங்கண்டு அவற்றைத் தலைதூக்க விடாமல் தடுப்பது முஸ்லிம் மக்களின் பொறுப்பு.

முஸ்லிம் மக்களுக்காக அரசுடன் புலிகள் பேசுவார்கள். முஸ்லிம்களுடன் கலந்தாலோசனை நடத்திவிட்டே பேசுவோம் இதில் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

- இப்படி கருணா அம்மான் கூறினார். (ஒ-3-4)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரபுதேவாவின்
★ அலாவுதீன்
இஷாக் - நளினி - வடிவேலுவின்
★ இதயமே
(பிரதிகள உடன் பெறலாம)
(32) வீடியோ விமல் யாழ்ப்பாணம் (22046)

புதிய வீடியோ CD வெளியீடு
★ இதயமே
★ அலாவுதீன்
C.Dகளும், பிரதிகளும் உடன்பெறலாம்.
விஸ்ணு வீடியோ,கோண்டாவல்.
சோலை வீடியோ,நெல்லியடி.
(C.29858) (32)

BRIGHTMAN
நாவலா வீதி (கிளை நிறுவனம்), யாழ் நகர்.
A/L DAY CLASS
கலைப்பிரிவு
ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
TAMIL - N.பாலா
LOG. - P.கமல்
H.C. - முகுந்தன்
GEO. - சிஜகன்
ECO. - P.சண்
DRAMA - தர்மா
(12) (21901)

ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
பௌதிகவியல்
சடப்பொருளியல்
ஆசிரியர்:திரு.குமரன்
ஆரம்பம்:03.09.2003(புதன்)
நேரம்:4.00-6.00பி.ப. (பழையநேரம்)
(22006)

A/L 2005
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl.)
கட்டுப்பாட்டு கணக்கு
Sat.,Sun.=>11-12
ஆரம்பம்:31.08.2003=>11 a.m.
BEACON யாழ்.
(22076)(12)

இதோ வந்துவிட்டது
TVS Scooty Pep, Fiero F2
மோட்டார் சைக்கிள்கள்







அங்கீகாரம் பெற்ற TVS விற்பனை முகவர்கள்
மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்
இல.163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(32-12-18) TP - 222 2544

இந்திய சாஸ்திரியார் வருகை





முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(21562 )(12-18)

சிற்றூழியர்கள் தேவை
எமது நிறுவனத்திற்கு இரவு / பகல் கடமைபுரியக்கூடிய ஆண் ஊழியர்கள் தேவை. விரும்புவோர் 01.09.2003 திங்கள் காலை 10.00 மணிக்கு எமது அலுவலகத்திற்கு நேரில்வரவும்.
மனிதவள சேவைப்பிரிவு
உதயன் பணிமனை.
(C29842)(12-17)

LLION AIR
லயன் ஏயர்
தினமும் காலையும் மாலையும் பாதுகாப்பான கொழும்பு விமான பயணத்திற்கு,
GENERAL SALES AGENT
&
HANDLING AGENT,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA.
Tel : 021 - 222 2504, 021 - 222 2823
Fax : 021 - 222 2040
அவசர தொடர்புக்கு
HOTLINE : 0777 - 382343
0722 - 401423.
(C29348) (12-18-29)

IPAS Institute of Professional Accounting Studies
பட்டயக் கணக்காளர் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
யாழ்.மாணவர்களே!
இன்னும் ஏன் தாமதம்? Jan. 2004 Foundation Examக்கு IPAS ஊடாக பதிவினை மேற்கொள்ளவும். நீங்களும் ஓர் Chartered Accountant ஆக உருவாகிடவும் உடனடியாக எம்மை நாடுங்கள்.
T.P.: 0777 563294
0777 563292.
(C29854) (32)
IPAS
199, Main Street,
Jaffna.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தயவு செய்து என்னை தடுக்காதீர்கள்......!

உதயன் ஆசிரியர் அவர்களுக்கு,

வைத்திய பட்டதாரி எழுதிக்கொள்வது, 12.08.2003 பத்திரிகையில் உங்கள் ஆசிரியர் தலையங்கம் கணடேன். செய்நன்றி மறவாதிருக்கும் மனிதப்பண்பு பற்றி எங்களுக்கு (வைத்திய பட்டதாரிகள்) எடுத்துரைத்திருந்தீர்கள்; மனதைத் தொட்டது. ஐந்தறிவு படைதத மிருகங்களுக்குக்கூட இருக்கும் பண்பு அது.

நான் உருவான - என்னை உருவாக்கிய - சமூகம் அச்செய்நன்றியை எந்தளவுக்கு தங்களைத் துன்பத்தில் தாங்கியவர்களுக்கு, இடர்களில் கைகொடுத்தவர்களுக்கு காட்டியிருக்கிறது?

என்னைச் சூழவுள்ள பல்கலைக்கழக சமூகத்திலோ, யாழ். போதனா வைத்தியசாலையிலோ, ஏன், என்னைச் சூழ்ந்த மற்ற மக்களிடத்திலோ எனக்கு ஒரு மாதிரியையோ அல்லது உதாரணத்தையோ காட்டமுடியவில்லையே.

யாழ். மருத்துவபீட மாணவர்களின் வைத்தியக்கல்வியை கருத்திற்கொண்டு தனது வேலை, குடும்பம் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு இங்குவந்து சேவை செய்த பேராசிரியர் வி.குணானந்தத்துக்கு (நரம்பியல் நிபுணர், முன்னாள் சத்திர சிகிச்சை விரிவுரையாளர்) நாங்கள் கொடுத்த கைம்மாறை உலகத்திலுள்ள எந்த சமூகமும் கொடுத்திருக்காது.

1997 ஆம் ஆண்டு, பாரிய இடம்பெயர்வுக்கும், இடர்களுக்கும் பின்னர், யாழ். மருத்துவபீடம் மீண்டும் திறக்கப்பட்டது. தன்னைச் சிறிது சிறிதாக உயிர்ப்பிக்கத் தொடங்கிய காலம் அது. சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாத படியால் அதை மூடவேண்டிய இக்கட்டுநிலை இருந்தது.

வெளிநாடுகளில் இருந்த ஈழத்து வைத்தியர்கள் யாழ். மண்ணில் கால்வைக்கப் பயந்திருந்த காலம்; அந்நேரம் கைகொடுக்க வந்த ஒரேயொரு வைத்திய நிபுணர் - டாக்டர் வி.குணானந்தம் இங்குவர இணங்கினார். மருத்துவபீடத்தின் முன்னாள் பீடாதிபதிகள், முன்னாள் உபவேந்தர், மருந்துவபீட மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கடிதம்மேல் கடிதம்போட்டு வாக்குறுதிகள் கொடுத்து அவரை இங்கு அழைத்தார்கள்.

பல்லாயிரக்கணக்கில் மாதாந்தம் உழைக்கக்கூடிய தனது நிரந்தர வேலையை (Neuro Surgeon) ராஜினாமாச் செய்துவிட்டு, போகவேண்டாம் என்று மற்றவர்கள் கூறிய அறிவுரைகளையும் புறக்கணித்துவிட்டு யாழ். மண்ணுக்கு வந்தார் அவர்.

அவருடைய படிப்பித்தல் அசாதாரணமானது; எப்பொழும் உற்சாகமுள்ளவராகவும், மாணவரை உற்சாகமூட்டுபவராகவும் அவர் இருந்தார். சத்திரசிகிச்சையை மட்டுமன்றி யாழ். மருத்துவபீடத்தில் விரிவுரையாளர்கள் இல்லாமலிருந்த நோயியல் (Pathology), நுண்ணுயிரியல் (Micro Biology) ஆகிய பாடங்களையும் படிப்பித்தார்.

அவருடைய திறமையான விரிவுரைகளுக்கு யாரும் ஈடுகொடுக்க முடியாது.

இவையெல்லாவற்றோடு நரம்பியல் சத்திர சிகிச்சை சேவையையும் யாழ். மக்களுக்கு அவர் வழங்கிவந்தார். விபத்துகளில தலையிலடிபட்டு உயிருக்குப் போராடிய எத்தனையோ உயிர்களை அவர் காப்பாற்றியிருக்கிறார்.

தனிப்பட்டமுறையில் மாணவர்களுக்கும் நிறைய உதவிகள் செய்தார். வெளிநாடுகளில் மாணவர்களுக்கு (Career Discussion) அவர்கள் எதிர்காலத்தில் எவ்வாறு தொழிலைச் சிறப்பாக்கலாம் என்று அறிவுரை வழங்குவதுபோல் எங்கள் மாணவர்களுக்கும் வழங்கினார்.

மாணவர்களின் மற்றைய திறமைகளைக் கருத்திற்கொண்டு இன்னிசை நிகழ்ச்சிகள் தயாரித்து, இரவு பகலாக அயராது உழைத்து எமது பல்கலைக்கழகத்துக்கு லட்சக்கணக்கில் பணம் சேர்த்துக் கொடுத்தார்.

(அதற்காக அவர் மீது வழக்கு தொடுத்து வட்டி கேட்டது வேறு விடயம்.)

இவ்வாறு அவர் செய்த உதவிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். யாழ். சமூகமும், பல்கலைக்கழகமும் உச்சப்பயனை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டன.

அதற்கு நாங்களெல்லோரும் செய்த நன்றிக்கடன் என்ன தெரியுமா? இனி எங்களுக்கு இவர் தேவையில்லை என்று கூறி நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரை நோகடித்து வெளியேற்றியிருக்கிறோம்; பல்கலைக்கழகத்திலிருந்து ஓரங்கட்டினோம்.

மிகக்குறைந்தளவு சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு நாள்முழுவதும் படிப்பித்த அவர்மீது இன்னிசை நிகழ்ச்சியில் சேர்ந்த காசை எடுத்துவிட்டார் என்று வழக்குப்போட்டோம்.

## ஒரு பகிரங்கக் கடிதம்

மாணவர்கள் இவற்றைக் கண்டுங்காணாததுபோல் நடந்து கொண்டார்கள். எதிர்க்க நினைத்த மாணவர்கள் பழிவாங்கப்படுவோம் என்று அஞ்சினர். ஒருவர்கூட அவரிடம் சென்று நீங்கள் செய்த சேவைகளுக்கு நன்றி ஐயா என்று கூறவில்லை.

அவரைச் சிறுமைப்படுத்தி, அவமாணப்படுத்தி, இந்த மாதம் அனுப்பி வைத்திருக்கிறோம்.

எங்கள் பல்கலைக்கழகமும், போதனா வைத்தியசாலையும் எப்பொழுதும் பற்றாக்குறை, பற்றாக்குறை என்கிறார்கள்; வைத்திய நிபுணர் வேண்டும் என்கிறார்கள் ஆனால், நரம்பியல் நிபுணர் ஒருவர் போகிறார் என்பதில் பாராமுகமாக உளளனர். பல்கலைக்கழகத்தில் எத்தனையோ பீடங்கள் ஒரு பேராசிரியரோ, விரிவுரையாளரோ இன்றி இருக்கின்றன. ஆனால் சிறந்த அறிவாளியான பேராசிரியர் வி.குணானந்தம் விரட்டப்படுகிறார்

நான் பாடசாலையைவிட்டு வெளியேறும்போது எனது ஆசிரியர்கள் எனக்கு ஒரு சிறந்த முயற்சி உள்ளவனாக, பணிவுள்ளவனாக, மற்ற உயிர்களுக்கு உதவி செய்பவனாக, நன்றியுள்ளவனாக இருக்கவேண்டுமென்று போதித்தார்கள்.

ஆனால், பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும்போது அது எனக்குப் புகட்டிய பாடங்கள் சில உண்டு. அவை:-

✱ யார் உயர் பதவிகளில், பலத்துடன் இருக்கின்றார்களோ அவர்களின் காலடியில் விழுந்துகிடக்க வேண்டும். (அவர் நல்லவரோ, கெட்டவரோ) அவர்கள் என்ன செய்தாலும், சொன்னாலும் தலையாட்டவேண்டும்.

✱ எமது சுயநலத்திற்காக மற்றவர்களை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ, அவ்வளவுக்குப் பயன்படுத்தவேண்டும்.

✱ எனது பதவி, எனது வீடு, மனைவி மக்கள், எனது எதிர்காலம் இவற்றை உயர்த்துவதுதான் எனது குறிக்கோளே ஒழிய, யார் எனன செய்தாலும், எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலையில்லை.

✱ செய்நன்றி கொல்லாமல் இருப்பது என்பது மற்றவர்களை குற்றஞ்சாட்டப் பயன்படுகின்ற ஒரு வார்த்தைப் பிரயோகம் அன்றி, நடைமுறை வாழ்க்கையில் பிரயோசனமற்ற ஒரு வார்த்தை.

மேற்சொன்னவற்றைக் கைக்கொள்ளாவிட்டால்-டாக்டர் வி.குணானந்தத்தின் நிலைமைதான் எனக்கும் ஏற்படும்.

நான் பார்த்து, படித்த நோயாளிகளின் கருணைமுகங்கள் என் மனக்கண்ணில் தெரிகின்றன. நான் என் கண்களை மூடிவிட்டு கொழும்புக்கு மூடை கட்டுகின்றேன்; எனது எதிர்காலத்தை ஒளிமயப்படுத்த. தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்.

இப்படிக்கு,
நெஞ்சிலுரமில்லாத,
நேர்மைத்துணிவில்லாத
வைத்திய பட்டதாரி.

## நல்லூரில் புலிகளின் படக்காட்சிகளை பொலீஸாரும் பார்வை

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள தியாகி திலீபன் நினைவுத் தூபிக்கு அருகே விடுதலைப் புலிகளால் காண்பிக்கப்பட்டு வந்த தமிழர் போராட்ட வரலாறு தொடர்பான வீடியோ படக்காட்சிகளை பெரும் எண்ணிக்கையிலான பொலீஸாரும் பார்வையிட்டனர்.

நல்லூர் உற்சவ இறுதி நாளான நேற்றுமுன்தினம் அங்கு 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை பற்றிய காட்சிகள் காண்பிக்கப்பட்டன. அதனை சிவில் உடையில் நின்ற ஆண், பெண் பொலீஸார் பார்வையிட்டமையையும் காணமுடிந்தது. (ம-ரி)

## வீதி பலத்த சேதம்; பாதசாரிகள் சிரமம்!

தென்மராட்சி,ஓக.30

சாவகச்சேரியிலிருந்து தபாற்கந்தோர் வீதி ஊடாக கனகன்புளியடிக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இவ்வீதியில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளும், வீதியின் குறுக்கே சில இடங்களில் வெட்டப்பட்ட குழிகளும் உரிய முறையில் மூடப்படாததால் பொது மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன.

மூன்று மைல் நீளமான இந்த வீதி பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்னமும் திருத்தப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(எ-117)

## நூல் நிலையம் திறந்துவைப்பு

சண்டிலிப்பாய்,ஓக.30

சங்கானை சுற்றியல் கூறு அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட புதிய நிர்வாகக் கட்டடத்தில் நூல் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நூலகம் திறக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.யோகராசா தெரிவித்தார். (எ-135)

## வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் பல்கலை. ஊழியர் பிரதிநிதிகளை விநாயகமூர்த்தி எம்.பி. சந்தித்தார்

தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களை, தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

கல்வி சாரா ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராசா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஊழியர்களின் கோரிக்கைகளை விநாயகமூர்த்தி எம்.பி. கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து அவர் ஊழியர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது நிலவும் சமர்தான சூழலைக் குழப்புவதற்கு சில தீய பேரினவாத சக்திகள் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றன. அவற்றின் தூண்டுதலினாலேயே இன்று பல்வேறுபட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கங்களின் சம்மேளனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிகைகள் அனைத்தும் நியாயமானவை.

இவற்றில் பல்கலைக்கழக கல்வி சார ஊழியர்களில் தொழில்நுட்பவியலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பள அதிகரிப்பு ஏனைய தரப்பினருக்கும் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மிகவும் பிரதானமானது.

இது தொடர்பாக நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துவேன் என்றார் அவர். (எ-5-6)

## அப்பளம் தயாரித்தல் பயிற்சிநெறி பூர்த்தி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பண்டத்தரிப்பு, பிரான்பற்று மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு அப்பளம் தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருட காலமாக சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு செயற்பாடாகவே இப்பயிற்சி வழங்கபபட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சில சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருவதுடன், தொழிற்திறன் விருத்தி மற்றும் வலுவூட்டல் செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்செயற்பாடுகள் மேலும் பல கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமையால், இதில் இணைந்துகொள்ள விரும்புகின்ற கிராம மட்டத்திலான நிறுவனங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார். (எ-10)

## பாரவூர்தி சாரதி அனுமதிப்பத்திரம் பெற இனி இரண்டு வருடங்கள் காத்திருக்கவேண்டும்

## மோட்டார் வாகன ஆணையாளர் தகவல்

எதிர்வரும் காலங்களில் இரண்டு வருட தகுதிகாண் காலத்தை பூர்த்தி செய்த சாரதிகளுக்கே பாரவூர்தி வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

- இவ்வாறு மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் காமினி சேனரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அலட்சியமான முறையில் வாகனஞ்செலுத்தும் சாரதிகள், இனிவரும காலங்களில் தண்டமாக பெருந்தொகைப் பணம் செலுத்தவேண்டியிருக்கும். அத்துடன், சிறை செல்ல வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

1947 ஆம் ஆண்டுக்குப் பின்னர், மோட்டார் போக்குவரத்துச் சட்டவிதிகள் மறுசீரமைப்புச் செய்யப்படுவது இதுவே முதற்றடவையாகும். திருத்தப்படும் சட்டவிதிகளுக்கமைய வாகன அனுமதிப்பத்திரங்கள், குறிப்பாக பார வாகன அனுமதிப்பத்திரங்கள் உடனடியாக வழங்கப்படமாட்டாது. பார வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர், பாரங்குறைந்த வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இரண்டு வருட காலம் அவரது தகுதி கணிப்பிடப்படும். அதன் பின்னரே பாரவூர்தி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

சட்ட விரோதமான முறையில் வாகனப்பதிவு செய்துள்ளவர்கள் விரைவில் இனங்காணப்படுவர். அவர்களிடம் இருந்து தண்டப்பணம் அறவிடப்படும். சிலசமயம் அவர்கள் சிறை செல்ல வேண்டியும் ஏற்படலாம்.

இரண்டு வருட தகுதிகாண் காலப்பகுதியில் சாரதிகள் தமது வாகனத்தின் முன்கண்ணாடியில் அடையாளமாக 'P' என்ற எழுத்தினைப் பொறித்துக்கொள்ளவேண்டும்.

அதிகளவில் புகையினை வெளியேற்றிக் கொண்டு போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு சேவையில் ஈடுபட தடைவிதிக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இவ்விதி கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இச்சட்டத்தின் மூலம் குற்றவாளியாக காணப்படுபவர்கள் பெருந்தொகைப் பணத்தைத் தண்டமாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

- இப்படி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார் (ம-9)

## ஜனசக்தி இன்சூரன்ஸின் ஆண்டுவிழா நிகழ்வுகள்

ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(எ-10)

## மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் விவரம் மீளாய்வு

சண்டிலிப்பாய்,ஓக.30

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் கொடுப்பனவுகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் செ.யோகானந்தராசா இவ்வாரம் மானிப்பாய், சண்டிலிப்பாய் கிராமப் பகுதிகளிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் விவரங்களை மீளாய்வு செய்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## வடக்கில் மாவட்டங்களில் போஷாக்கு மேம்பாட்டுத் திட்டம்

ஐ.நா. உலக உணவுத்திட்ட அமைப்பினால் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் தாய்மார் மற்றும் சிறார்களின் போஷாக்கை மேம்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் கிழக்கு மாகாண எல்லைப்புறப் பிரதேசமான பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். இந்த மாவட்டங்களில் உள்ள 79 ஆயிரத்து 412 பேர் இதனால் பயன் பெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் உட்பட 6 மாதம் தொடக்கம் 3 வயதுவரை சிறார்களும் ஏற்கனவே இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

தற்பொழுது போஷாக்கற்ற சிறார்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பால்மாவினை இனிவரும் காலங்களில் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள 4 வயது தொடக்கம் 5 வயது வரையான சிறார்கள் அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இந்த அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றது.(ம-10)

# மிதிவெடி அபாய கல்வி வாரம் முதலாம் திகதி முதல் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக.30

குடாநாட்டில் பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் மிதிவெடி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'மிதிவெடி அபாய கல்வி வாரம்' ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கண்ணிவெடி செயற்பாட்டுப் பிரிவினரால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த வாரத்தில் பல்வேறு நிகழ்வுகளுக்கும ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

பத்திரிகைகள், திரையரங்குகள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் விளம்பரம் செய்தல், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், பதாகைகள் காட்சிப்படுத்தல், வாகனங்களில் கொடி பறக்க விடல் ஆகியவற்றை மேற்கொள்ள முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் முதல் நான்கு நாளும், மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் கடைசி மூன்று நாளும் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், வெண்புறா நிறுவனம், சர்வோதயம், ஐக்கியராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன விழிப்புணர்வுக்கான நாடகங்கள் மற்றும் தெருக்கூத்து ஆகியவற்றை நடத்தவிருக்கின்றன.

இந்த வாரத்தில் நிகழ்வுகளுக்கு பொது அமைப்புகள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை ஆதரவு தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)






பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் நடத்தும் 'வாழ்கையில் ஆன்மீகத்தின் பங்கு' என்னும் முழு நிலா மாதாந்த கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை யாழ்.வேம்படி உயர்தர பாடசாலையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய திருநெல்வேலி தேசிய சேமிப்பு வங்கி கிளையின் முகாமையாளர் இ.இராஜா மகேந்திரசிங்கத்துக்கு பிரம்மகுமாரி ஜெயமணி நினைவுப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும், கலந்துகொண்டவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன், பிரம்மகுமாரி கௌரி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)

# சம்பள முரண்பாடு தீர்க்கப்படாவிடில் செப்.8 முதல் தொடர்வேலை நிறுத்தம்

## சுகாதாரத் தொழிலாளர் சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு,ஒக.30

சுகாதார சேவைகளுக்கான தொழிலாளர் சங்க சம்மேளனத்தினால் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சம்பள முரண்பாட்டினை தீக்கும் ஆலோசனைகளை சுகாதார அமைச்சு ஏற்காத பட்சத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் தொடர்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அச்சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனததின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவிதததாவது:-

சுகாதார அமைச்சின் சம்பள ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கை, எவ்விதத்திலும் ஏற்கமுடியாதது. அதற்கான காரணங்களை எழுத்து மூலம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளோம்.

அரசியல் கட்சியொன்றின் தூண்டுதலின் பேரில் எமது வேலை நிறுத்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். இது எம்மை அவமதிப்பதாக உள்ளதுடன் அருவருப்பான செயலுமாகும்.

அரச வைத்தியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கிய அதே சுற்றறிக்கைக்கு அமைவாக ஏனைய சேவைகளின் சம்பள முரண்பாடுகளையும் நீக்கும்படி 54 தொழிலாளர் சங்கங்களின் சார்பில் அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் சகல வைத்தியசாலைகளிலும் தொடர்ச்சியான வேலை நிறுத் தம் மேற்கொள்ளப்படும்.

- இப்படி இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-9)

### 1996-2001 இடைப்பட்ட

# 6 ஆண்டுகளில் வன்னியில் 3 லட்சம் பேருக்கு மலேரியா

கிளிநொச்சி,ஒக.30

6.ஆண்டுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 21ஆயிரத்து 115 பேர் மூளை மலேரியா நோயின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள தெரிவிக்கின்றன.

1996ஆம் ஆண்டுமுதல் 2001 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியிலேயே இந்த நோய்த் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்ளது.

இதேகாலப் பகுதியில் 2 லட்சத்து 29 ஆயிரத்து 568 பேர் சாதாரண மலேரியா நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளார்கள்.

அவர்களில் 573 பேர் மலேரியாவினால் உயிரிழந்ததாகவும் தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-12)

### அரியாலைப் பகுதியில்

# நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்ட வயல்களை அரச அதிபர் பார்வையிட்டார்

கொழும்புத்துறை,ஒக.30

அரியாலைப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கென படையினரால் அனுமதிக்கப்பட்ட வயல் காணிகளை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் சென்ற குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

இப்பகுதிகளில் நெற்செய்கையை ஆரம்பிக்க வசதியாக முதலில் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கை உடன் ஆரம்பிக்கப்பட்டு அப்பணிகள் நிறைவுற்றதும், அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தின் எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

இக்குழுவில் அரச அதிபருடன் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், மிதிவெடி அகற்றும் திட்ட இணைப்பாளர், அரியாலை விவசாய சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர்.

அனுமதிக்கப்பட்ட பிரதேச எல்லைக்குள் வரும் விவசாயிகளின் பெயர் பட்டியல்களுக்கு அமைய விவசாய உபகரண உள்ளீட்டு உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-30)

# சிறுவர்களை ஏமாற்றிவிட்டு தங்க நகைகள் அபகரிப்பு!

## நகரப் பகுதியில் அதிகரிப்பதாக பொலீஸ் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக.30

நகரப் பகுதியில் சிறுவர், சிறுமிகளை ஏமாற்றி அவர்களின் தங்க நகைகளை அபகரிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் சிறுவர் சிறுமிகளின் தங்க நகைகளே இவ்வாறு அதிகம் அபகரிக்கப்படுவதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

பெற்றோர்களுடன் வைத்தியசாலைக்கு வரும் சிறுவர், சிறுமிகள் தனித்திருக்கும் சமயம் பார்த்து இனிப்புப் பண்டங்களைக் காட்டி மறைவான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் திருடர்கள், அங்குவைத்து அவர்களிடமுள்ள தங்க நகைகளை அபகரித்துக்கொண்டு 'நைஸாக' நழுவிவிடுகின்றார்கள்.

இதனால், சிறுவர்களுடன் வைத்தியசாலைக்கு வருவோர் அவதானமாக இருந்துகொள்ளுமாறும் பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அண்மையில் தனது தாயாருடன யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்த சிறுமி ஒருவரைத் தாயார் மருந்தெடுக்கச் சென்றசமயம் பார்த்து சைககிளில் மறைவான இடம் ஒன்றுக்கு அழைத்துச்சென்ற இளைஞர் ஒருவர் அவரது காதுகளில் இருந்த இரு தோடுகளையும் கழற்றி எடுத்துவிட்டு சிறுமியை அநாதரவாக விட்டுச் சென்றதாகவும் -

பின்னர் இச்சிறுமி யாழ்.பொலீஸார் மூலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

# வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் 28 கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,ஒக.30

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி வேலைகளுககும், சமூக சேவைகள் கலாசார பணிகளுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ், 28 கருத்திட்டங்களை இவ்வருடம் மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கென 15 லட்சத்து 79ஆயிரம் ரூபாவும், சமூக சேவை மற்றும் கலாசார பணிகளுக்கென 2லட்சம் ரூபாவுமாக 17லட்சத்து 79 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அங்கீகாரம் கிடைத்துள்ள கருத்திட்டங்களும், அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளின் விவரங்களும் வருமாறு:-

★சூராவத்தை கலைமகள் சனசமூக நிலையம் புனரமைப்பு - 48 ஆயிரத்து 500 ரூபா.

★ஏழாலை வடக்கு கிராம அபிவருத்திச் சங்கக் கட்டடம் புனரமைப்பு - 50ஆயிரம் ரூபா.

★ இணுவில் கிழக்கு முன்பள்ளி -தளபாடக் கொள்வனவு - ஒரு லட்சம் ரூபா.

★ உடுவில் கிழக்கு நாச்சி அம்மன் சனசமூக நிலைய கட்டடம் - 97 ஆயிரம் ரூபா.

★குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலைய பூர்த்தியாக்கப்படாத கட்டட பூர்த்தி வேலை - 72 ஆயிரத்து 750 ரூபா.

★மத்தாவோடை கலைவாணி சனசமூக நிலையம் தளபாடக் கொள்வனவு - 24ஆயிரத்து 250ரூபா.

★மயிலங்காடு கிழக்கு ஞானகலா சனசமூக நிலையம் தளபாடக்கொள்வனவு - 24ஆயிரத்து 250ரூபா.

★சுன்னாகம் தெற்கு காந்தரூபன் சனசமூக நிலையம் - தளபாடக் கொள்வனவு - 24 ஆயிரத்து 250 ரூபா.

★குப்பிளான் குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையம் -தளபாடக் கொள்வனவு 24ஆயிரத்து 250 ரூபா.

★ஏழாலை வடகிழக்கு சனசமூக நிலையம் - தளபாடக்கொள்வனவு- 24ஆயிரத்து 250ரூபா.

★ஈவினை-அச்செழு கலைமகள் சனசமூக நிலையம் தையல் இயந்திரம் கொள்வனவு - 24 ஆயிரத்து 250 ரூபா.

★உடுவில் - மல்வம் ஞானப்பிரகாச சனசமூக நிலையத்துக்கு தையல் இயந்திரம் கொள்வனவு - 24 ஆயிரத்து 250 ரூபா.

★குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலையம் தளபாடக் கொள்வனவு - 24 ஆயிரத்து 250 ரூபா.

★திடற்புலம் ஒளிநிலா சனசமூக நிலையம்-தளபாடக் கொள்வனவு- 24 ஆயிரத்து 250 ரூபா.

★வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20முன்பள்ளிகளுக்கான கல்வி உபகரணங்கள் - 97 ஆயிரம் ரூபா.

★இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் சனசமூக நிலையம் கட்டடத் திருத்தம், தளபாடக்கொள்வனவு - 50 ஆயிரம் ரூபா.

★சுன்னாகம் முசாமில் சனசமூக நிலையம் - கட்டடத் திருத்தம் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா.

★ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகபுர கிராம அபிவிருத்திச் சங்கம் குறை வேலைத் திருத்தம் - 97 ஆயிரம் ரூபா.

★உடுவில் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையம் தளபாடக் கொள்வனவு - 25ஆயிரம் ரூபா.

★ தாவடி வீரசிங்கம் வீதி காந்தி சனசமூக நிலையம் நூல் கொள்வனவு - 25ஆயிரம் ரூபா.

★இணுவில் இந்துக் கல்லூரி கட்டடப் புனரமைப்பு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★இணுவில் மத்திய கல்லூரி தளபாடக் கொள்வனவு -50 ஆயிரம் ரூபா.

★இணுவில் இந்துக்கல்லூரி - புத்தகக் கொள்வனவு -50ஆயிரம் ரூபா.

★புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை - தளபாடக்கொள்ளவனவு 50ஆயிரம் ரூபா.

★கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை - தளபாடக்கொள்வனவு மின்சார உபகரணக் கொள்வனவு 2லட்சம் ரூபா.

★ஏழாலை சைவசன்மார்க் வித்தியாசாலை சிறுவர் பூங்கா புனரமைப்பு - 48 ஆயிரத்து 500 ரூபா.

**சமூக சேவைகள் மற்றும் கலாசார பணிகள்**

★ஏழாலை ஸ்ரீவசந்த நாகபூசணி அம்மன் ஆலய தேவஸ்தானம் - குழந்தைகள் இல்லம் - ஒரு லட்சம் ரூபா.

★மயிலணி கந்தசுவாமி ஆலயம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா. (எ-152)

### வைத்தீஸ்வராவில் நடைபெறும்

# கண்காட்சியில் வெற்றிபெறுவோர் தேசியமட்ட தொழில் பயிற்சிக்கு!

## ஏற்பாட்டுக்குழு தகவல்

யாழ்ப்பாணம்,ஒக.30

அடுத்தமாதம் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ள தொழில் கண்காட்சியில் வெற்றியீட்டுபவர்கள், தேசிய மட்டத்தில் கைத்தொழில் பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெறவுள்ளனர்.

இக்கண்காட்சி தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள குழுவினர் இத்தகவலைத் தெரிவித்தனர்.

இந்தக் குழுவில் தொழில் துறைத் திணைக்கள தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த கணக்காளர் எஸ். சிவானந்தகுமார், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிலிங்கம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் பெஞ்சமின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவினர் யாழ். அரச அதிபர் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இக்கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியிலிருந்தும் சுயதொழில் முயற்சியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (எ-9)

# சமய சந்நிதிகளில்

வேலணை வடக்கு, இலந்தைவனம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளது. (எ-10)

★ ★ ★

யாழ். அத்தியடி பிள்ளையார் ஆலய மணவாளக் கோல உற்சவமும் விநாயகர் சதுர்த்தியும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிசேகமும், மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டப பூசையும் சுவாமி வீதியுலாவருதலும் இடம்பெறும். நாளை காலை 9 மணிக்கு சங்காபி ஷேகமும், மாலை 4.30 மணிக்கு திருவிளக்கு பூஜையும் நடைபெறும். (எ-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.30

சிறுப்பிட்டி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-10-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.30

அல்வாய் வடக்கு, மாணிக்கம் பற்றை மாணிக்கப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குநடைபெறவுள்ளது.(எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ் புனித மரியாயின் சேனையின் ஒருநாள் தியானம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரையும் யாழ். புனித அடைக்கல அன்னை ஆயத்தில் நடைபெறும். (எ-10)

★ ★ ★

ஏழாலை மத்தி சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும். (எ-10-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டுவின் முடிசூடா மன்னன் T.S. என்று செல்லமாக அழைக்கப்படும் இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்

**திரு.த.சிவலிங்கம்**

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பேருவகை அடைகின்றோம். மேலும் பல செல்வங்கள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல சங்கரத்தை பத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள: தாதிய உத்தியோகத்தர்கள்

N.நற்குணராஜா
K.செந்தில்குமார்
S.பாமதி
N.நந்தினி
G.கோபாலசிங்கம்.
R.கருணாநிதி
M.ஜெயச்சந்திரன்

(22018)(25-16)

## ஈவினை மத்தி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில்

ஏகாதச தினவிழா (பதினொரு திருநாள்)

நாளை (2003.08.31) ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பம்

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

திருவிழாக்கால விஷேட உற்சவங்கள்

31.08.2003 ஞாயிறு பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
05.09.2003 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வசந்த உற்சவம்
07.09.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வேட்டைத்திருவிழா
09.09.2003 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா
10.09.2003 புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா
11.09.2003 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத்திருவிழா

*மஹோற்சவ குரு*

**சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்**

(தேவஸ்தானம)

- ஆலய பரிபாலன சபையினர்.

ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்.

(21982)(16)

## உங்கள் தேவைகளுக்கேற்ற உறுதிமிக்க நண்பன் சீ.ஈ.ஜ.

## உறுதி மற்றும் பல்துறைத் திறன்! நீர்க் குழாய்



சீஈஜ நீர்க்குழாய்கள் நீடித்துழைக்கும் உறுதி கொண்டவை. அதிகளவு நீரை விரைவாக, சுலபமாக, ஆற்றலுடன் எடுத்துச் செல்லத்தக்கவை. விவசாயம், கைத்தொழிற்றுறை, தோட்டத்துறை, மற்றும் சுரங்கங்கள் போன்ற அகழ்வுத் தொழிற்றுறை தொடர்பான நீர்ப்பாசனங்களுக்கு மிகவும் உகந்தது. தற்போது,


1அங்,1 1/4 அங், 1 1/2அங், 2அங், 3அங், அளவுகளில் கிடைக்கின்றது. விலை மீற்றர் ரூபா 24/= இலிருந்து

**பொலிபெக் சீ. ஈ. ஜ. மார்க்கட்டிங்**

52, மயூரா பிளேஸ், கொழும்பு 6. தொலைபேசி : 588313, 582615, 598076.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
15
08
1913



ஆண்டவன் அடியில்
01
08
2003

**அமரர் ஆறுமுகம் வேலுப்பிள்ளை**

(நெல்லியடி கிழக்கு, வதிரி, கரவெட்டி (பிலாவடி)யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்)

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன்
வாழ்ந்த உங்களைப்
புனிதரில் ஒருவராய் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் நாளை (31-08-2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிலாவடி,*
*வதிரி, கரவெட்டி.*

(22022)(16) - குடும்பத்தினர்.

## நடமாடும் இலவச கண்சிகிச்சை முகாம்

"உங்கள் கண்களை நாங்கள் காப்போம்"


- உங்கள் கண்களை விசேட கண் பரிசோதகர்கள் மூலம் பரிசோதிப்பதற்கும்
- சகல வகையான கண்ணாடிகளை சகாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும்

"உங்களை அன்புடன் அழைக்கின்றோம்"

| பாடசாலை | திகதி | நேரம் [புதிய நேரம்] |
|---|---|---|
| யா/பாசையூர் மகளிர் கல்லூரி | 01.09.2003 | பி.ப. 2.00 - 6.00 |
| யா/வட இந்து மகளிர் கல்லூரி | 02.09.2003 | காலை 9.00 - பி.ப. 1.00 |
| யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் | 02.09.2003 | பி.ப. 2.00 - மாலை 6.00 |
| புற்றாலை மகா வித்தியாலயம் | 03.09.2003 | காலை 9.00 - பி.ப 1.00 |
| யா/சென்தோமஸ் றோ.க.த.க.பா | 03.09.2003 | பி.ப. 2.00 - மாலை 6.00 |
| யா/கலட்டி றோ.க.த.க.பா | 04.09.2003 | காலை 9.00 - பி.ப. 1.00 |
| யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. | 04.09.2003 | பி.ப. 2.00 - மாலை 6.00 |
| யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் | 05.09.2003 | காலை 9.00 - பி.ப 1.00 |
| யா/வல்வை மகளிர் வித்தியாசாலை | 05.09.2003 | பி.ப. 2.00 - மாலை 6.00 |

- 17.06.2003 முதல் 24.06.2003 வரை எம்மிடம் பதிவு செய்து கண்ணாடி பெறாதவர்களும் கண்ணாடியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அனுசரணை:



**ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்**

(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)
இல.54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு - 02.

(C29849) (32-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய ஆசிரியர் திரு.செ.பிரணவநாதன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

(22015)(16)

# பதவி வெற்றிடம்

**1.தொழில்நுட்ப உதவியாளர் (02)**

தகைமை:- NCT அல்லது சமனானது
நீர்ப்பாசன முன் அனுபவம் விரும்பப்படுவது.
சுயவிவரக் கோவையுடனும் சான்றிதழ்களுடனும் 03.09.2003 புதன்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**2.வரவேற்பாளர்(பெண்) (01)**

சுயவிவரக்கோவையை 03.09.2003 புதன்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:

யாழ்ப்பாண நீர்வள பாதுகாப்பு சூழலியல் திட்டம்,
யாழ்ப்பாண திட்ட அலுவலகம்,
இல.1, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## கூறுவிலைகள் தேவை

காரியாலயத்திற்கு கீழ்க்கண்ட சேவைகளை வழங்குவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. யன்னல்களுக்கு கேட்டின் தைத்துப் பொருத்துதல்.
2. அறைக்கு கண்ணாடி பிரிவினை அமைத்தல்.
3. அறைக்கு குளிரூட்டிகள் பொருத்துதல்.

தொலைபேசி இல. 222 6752 இல் 03.09.2003இற்கு முன்பாக வேலை நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

(22005)          (21-11-16)


## விண்ணப்பதிகதி நீடிப்பு

இலவச பாடசாலை சீருடை விநியோகத்திற்கான விண்ணப்பத்திகதி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சீருடை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் தினம் இம்மாதம் 31ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பாடசாலை விடுமுறைக காலமாகையால் குறிப்பிட்ட காலத்திற்குள் சீருடைபெறும் விண்ணப்பங்களை சில பாடசாலைகள் சமர்ப்பிக்க முடியாமையால் இதற்கான விண்ணப்பதிகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ.8)

## சண்டிலிப்பாயில் பயிற்சி நிலையம்

தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் தொழிற் பயிற்சி நிலைய கட்டடம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பணிமனைக்கு சொந்தமான காணியில் பிரதேச செயலகத்திற்கு கிழக்குபபுறமாக நிறுவப்பட்டு வருகின்றது.

தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் நிதி மூலம் இந்த தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு வருவதாகவும், கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் இங்கு கணனி, மின்னியல் பயிற்சிநெறிகள் உட்பட மற்றும் பல பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.





# இதோ! இன்று யாழ். நகரில்.....

உங்கள் தேவைக்கான
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின்
மகத்தான தரமான தெரிவுகளுக்கு!
நீங்கள் நம்பிக்கையோடு நாடவேண்டிய இடம்:



# மகா சில்க்ஸ்

இல. 32, 40A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/29846)



கிளை நிறுவனமான:

# பியூட்டி சில்க்ஸ்

UTHAYAN Graphics

உங்கள் புடைவைத் தேவைகளுக்குக் கைராசியான ஸ்தாபனம்

தனது இரண்டாவது வருட சேவையில் அநேக வாடிக்கையாளர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு மகத்தான சேவையாற்றி இப்போது மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**Beauty Silks** இல.69, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

உ

## சிறுப்பிட்டி மேற்கு, பெருதலை திருவருள்மிகு ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் திருக்கோயில்

# நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம்

அடியார்களே!

மேற்படி ஆலயத்தில் நாளை (31.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 7.12 மணிமுதல் 9.40 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. எண்ணெய்க்காப்பு இன்று (30.08.2003) சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

பிரதிஷ்டா பிரதமகுரு: சபரீசதாசன், சிவாச்சார்ய தேவகான பூஷணம், பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சார்யார் (நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில்)

அனைவரும் வருக! சிவன் அருள் பெறுக!!

பெருதலை, சிறுப்பிட்டி மேற்கு.     (21985) (25-11-16)     - ஆலய பரிபாலன சபையினர்.